# தமிழகத்தில் தேர்தல்கள் - 2001

பன்னாட்டு நிறுவன ஆதிக்கங்களுக்கும்
மத, இன, சாதிய, பாலிய வெறி அடக்குமுறைக் கலாச்சாரத்திற்கும்
எதிரான

# தமிழக மக்கள் அறிக்கை

## அறிக்கையிலே கையொப்பமிட்டுள்ள இயக்கங்களும், மக்கள் அமைப்புகளும்

- ஆதித் தமிழர் பேரவை
- பெண்கள் போராட்டக் குழு
- சுவாதி பெண்கள் இயக்கம்
- தமிழ்நாடு குடிசை வாழ்வோர் சங்கம்
- தலித் போராட்டக் குழு - பஞ்சமி நில மீட்பு இயக்கம்
- குழந்தை உழைப்பு எதிர்ப்பு பிரச்சாரம் - தமிழ்நாடு
- தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பு
- பெண்ணுரிமை இயக்கம்
- தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி நுகர்வோர் குழுக்களின் கூட்டமைப்பு
- அனைத்திந்திய கத்தோலிக்க கல்லூரி மாணவர் அமைப்பு
- தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம்
- பழவேற்காடு மீனவர் சங்கம்
- ஆதித் தமிழர் விடுதலை இயக்கம்
- மக்கள் அமைப்புகளின் தேசிய கூட்டமைப்பு, தமிழ்நாடு
- தமிழ்நாடு அருந்ததியர் இளைஞர் முன்னணி
- தலித் கிறிஸ்தவர் விடுதலை இயக்கம், தமிழ்நாடு - பாண்டிச்சேரி
- திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட பீடித்தொழிலாளர் யூனியன்
- கல்வி உரிமைக்கான தமிழக கூட்டமைப்பு
- சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணி - தமிழ்நாடு
- தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம்
- தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி மேம்பாட்டு பிரச்சாரக் குழு
- உழைக்கும் விவசாயிகள் இயக்கம்
- தமிழ்நாடு கிராம ஊராட்சி தலைவர்கள் சங்கம்
- தமிழகப் பெண்கள் இயக்கம்
- காஞ்சிபுரம் மாவட்ட தலித் பஞ்சாயத்து பிரதிநிதிகள் கூட்டமைப்பு
- தமிழ்நாடு தன்னார்வ நலக்குழுமம்
- தமிழ்நாடு மது ஒழிப்பு இயக்கம்
- தமிழ்நாடு தலித் பெண்கள் இயக்கம்
- தமிழ்நாடு சுற்றுச் சூழல் கழகம்
- ஆதித் தமிழர் விடுதலை இயக்கம் - பாண்டிச்சேரி
- தலித் சேனா - தமிழ்நாடு
- சமூக மேம்பாட்டுக்கான தமிழக மக்கள் அமைப்பு

# தமிழகத்திலே தேர்தல்கள்

மீண்டும் தேர்தல்கள் தமிழகத்திலே!

**மே மாதத்திலே சட்டசபைத் தேர்தல்**

- **சட்டசபையிலே இருக்கும் 234 இடங்களை நிரப்புவதற்காக, கைப்பற்றுவதற்காக!**
- **அக்டோபர் மாதத்திலே பஞ்சாயத்துத் தேர்தல் ஏறக்குறைய 1,17,000 இடங்களில் அடித்தள அதிகாரப் பகிர்வுகளுக்காக!**

இன்றைய தமிழகத்திலே சாதாரண மக்களின், முக்கியமாக நலிந்த மக்களின் அன்றாடத் தேவைகளும், பிரச்சனைகளும் எத்தனை எத்தனையோ - வறுமை, வேலையின்மை, சுற்றுப்புறச்சீரழிவு, சமூகப்பாகுபாடுகள், ஊழல், ஒடுக்குமுறைகள், அடிப்படை மனித உரிமை மீறல்கள், மத, இன, சாதிய வெறி தாக்குதல்கள் இன்னும் பல.....

இவற்றிற்கும் வருகின்ற தேர்தல்களுக்கும் என்ன தொடர்பு? தேர்தல் என்பது, யார் அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி மக்களனைவருடைய தேவைகளை நிறைவேற்று வார்களென கணித்து, நம்பிக்கைக்கு உரியவர்களை மக்கள், தங்கள் ஓட்டுரிமை மூலம் தேர்ந்தெடுக்கவல்ல ஒரு களம்.

தி.மு.க., அ.தி.மு.க., த.மா.க., ம.தி.மு.க., பா.ம.க., காங்கிரஸ், பா.ஜ.க....... அனைத்துக் கட்சிகளுமே தங்களுடைய கொள்கைகளாக, கோட்பாடுகளாக சிலவற்றைப் பறைசாற்றுகின்றன. அவ்வகையிலே தேர்தல் அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன; வாக்குறுதிகளும் வாரி வழங்கப்படுகின்றன.

எனினும், அடிப்படையிலே இக்கட்சிகளிடையே பெரிய அளவில் வேறுபாடுகள் இல்லையென்பது நமது அனுபவ அறிவு. அனைத்துக் கட்சிகளுமே, ஆட்சியிலிருக்கும்போது, உலகச் சந்தை, பெரும் முதலாளிகள் மற்றும் பணம் படைத்தவர்களின் நலன்களை முதன்மைப்படுத்தி அரசியல் நடத்துபவையே! மேலும் இன்று இந்தியாவிலும், தமிழகத்திலும், கலாச்சாரம், பொதுவாழ்க்கை, பொருளாதாரம், அரசியல் எனும் அனைத்துத்தளங்களிலும் பரவி ஓங்கி நிற்கும் ஊழல், அடக்குமுறைக்கலாச்சாரத்தின் எதிரோலிகளாகவே அனைத்துக்கட்சிகளும், அரசுகளும் செயல்படுகின்றன!

**வருகின்ற தேர்தலிலே மதச்சார்பின்மை, ஊழல் எதிர்ப்பு என்கின்ற போலியான போர்வையிலே மறைந்து கொண்டு மதவெறியையும், ஊழலையும் கூட்டிச்சேர்த்து வளர்த்துள்ள, இரு கட்சிகளின் தலைமையிலான அணிகளே மக்கள் முன் நிறுத்தப்பட்டுள்ளன. மற்ற பல கட்சிகள் சாதிக் கும்பல்களாக உருவெடுத்து நிற்கின்றன.**

**அநீதி, சாதிய, வர்க்கக் கொடுமைகள், ஏற்றத் தாழ்வுகளை எதிர்த்துப் போராடும் வரலாறு உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கட்சிகள் கூட ஊழல், மத, இன, சாதிய, பாலிய வெறி படைத்த, அடக்குமுறை மற்றும் சந்தைப் பொருளாதாரக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும் கட்சிகளோடு, ஒட்டி உறவாடி கூட்டணி அமைக்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.**

**மக்கள் தேவைகளை முன்வைக்கக்கூடிய மாற்று அணி பற்றிய கனவும் சிதைந்து அழிந்து விட்டது!**

மறுபுறம், 'தேர்தலைப் புறக்கணிப்போம்', □'கட்சிகளைப் பார்க்க வேண்டாம்', 'நேர்மையானவர்களைத் தேர்ந்தெடுங்கள்'..... போன்ற கண்ணோட்டங்களும், கோஷங்களும் அவ்வப்போது முன்வைக்கப்படுகின்றன. ஆனால் இவையும் நீண்ட கால மாற்றங்களுக்கு இட்டுச்செல்லப்போவதில்லை.

இத்தகு பின்னணியிலே நடைபெறவிருக்கும் இந்தத்தேர்தல், நலிந்த மக்களின் ஒட்டுமொத்த விடுதலைக்காகவும், ஒரு புதிய சமநீதி சமுதாயத்திற்காகவும், தொடர்ந்து போராடிவரும் மக்கள் இயக்கங்களுக்கும், அமைப்புகளுக்கும் பெரியதொரு சவால்!

இன்று தமிழகத்திலே, சாதாரண மக்களின் உரிமைப்போராட்டங்களுக்கு உருவங்கொடுக்கும் வகையிலே, பல்வேறு இயக்கங்களும், அமைப்புகளும் செயல்பட்டுவருகின்றன, போராடிவருகின்றன. முக்கியமாக, பெண்ணுரிமை இயக்கங்கள், தலித்து விடுதலை இயக்கங்கள், பழங்குடியினர் மற்றும் மீனவர் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள், கூலி விவசாயிகள் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள்,...... இவை அனைத்தும் தத்தம் தளங்களிலே தமது மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகவும், பொருளாதார சமூக மேம்பாட்டிலே உரிய பங்கிற்காகவும் போராடிவருகின்றன.

இத்தகு பல்வேறு மக்கள் இயக்கங்களின், அமைப்புகளின் உணர்வுகளுக்கும், உரிமைக்குரல்களுக்கும் உருவம் கொடுக்கும் வகையிலே, இக்கூட்டமைப்பு அறிக்கையினை நாங்கள் வெளியிடுகின்றோம்.

**தமிழகத்திலும், இந்தியத் துணைக்கண்டத்திலும்,**

**மக்களின் உண்மையான தேவைகளுக்கும், இன்றைய தேர்தல் மற்றும் அரசியலுக்குமிடையே உள்ள இடைவெளி மறைய வேண்டும்.**

**ஊழலற்ற சமநீதி சமுதாயத்தினை உருவாக்கும் வகையிலே, தேர்தல் முறைகள் முதற்கொண்டு அரசுகளின் அனைத்து அமைப்புகளும், செயல்பாடுகளும் அடிப்படையிலே மாற்றப்பட வேண்டும்.**

**இத்தகு கண்ணோட்டங்களும், எதிர்பார்ப்புகளும், அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளிலே தெளிவாக இடம்பெறுவதுடன், அவற்றிற்கான செயல் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்!**

# அலைக்கழிக்கும் இரு அலைகள்

பல்வேறு தளங்களிலே பல்வேறு பேராட்டங்கள் நடந்து வரும் சூழ்நிலையிலே, அனைவரையும் மூழ்கடித்து நிர்மூலமாக்கக் கூடிய, இரு பெரும் அலைகள் இன்று நம்மை எதிர்கொள்கின்றன. முக்கியமாக நலிந்த மக்கள் அனைவரின் அன்றாட வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கி, நமது பண்பாடு, இறையாண்மை, பொருளாதார மேம்பாடு, அடிப்படை மனித உரிமைகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக ஒழிக்கவல்ல வகையிலே இவ்விரு அலைகளும் பூதாகரமாக உருவெடுத்து நிற்கின்றன. அவ்விரு அலைகள்தான்

1. **'உலகமயமாதல்' எனும் போர்வையிலே வரும் பன்னாட்டு நிதி, வணிக, தொழில் நிறுவனங்களின் ஆதிக்கம்.**
2. **மத, இன, சாதிய, பாலிய வெறிகொண்ட அடக்குமுறைக் கலாச்சாரம்.**

இவை இரண்டும் பெரும்பான்மை மக்களின் வாழ்நிலைகளையும், சமூக பொருளாதார மேம்பாட்டையும் தகர்க்கின்றன. மக்களின் எண்ணங்களையும் கனவுகளையும், எதிர்க் கலாச்சாரக் கூறுகளையும் தம்வயப்படுத்துகின்றன.

கடந்த பத்தாண்டு அனுபவங்களிலே, இவ்விரு ஆதிக்கப் போக்குகளுமே ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவையல்ல; மாறாக இரண்டுமே மற்றதின் உந்துசக்தியாகவும், உறுதுணையாகவும் இயங்கி வருகின்றன என்கிற உண்மை தெளிவாக வெளிவந்துள்ளது. இரண்டினாலும் பயனடையும் குழுக்கள் ஒரு சிலவையே. எனவேதான் இவ்விரு சக்திகளும் திரைமறைவிலே எடுக்கும் முடிவுகள், அவர்களின் வெளிநாடகங்களையும் தாண்டி மக்களுக்கு தெளிவாக புரிகின்றன!

இவ்விரு அலைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டு பலியாக்கப்படுபவர்களில் முக்கியமானவர்கள்:

- **பெண்கள்**
- **தலித்து மக்கள்**
- **பழங்குடியினர்**
- **குழந்தைகள்**
- **சிறு மீனவர்கள்**
- **நகர்ப்புற குடிசைவாழ் மக்கள்**
- **தொழிலாளர்கள்**
  **(முக்கியமாக கூலி விவசாயிகள் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள்)**
- **உடல் ஊனமுற்றோர்**
- **சிறுபான்மையினர்**

விவசாயத்தையும், சிறு தொழில்களையும் புறக்கணித்து, பன்னாட்டு மற்றும் பெரும் தொழில்களை மையப்படுத்தும் புதிய பொருளாதாரக்கொள்கை, தனியார்மயமாக்கல், கணனிமயமாக்கல் - போன்ற போக்குகளினால் வேலைவாய்ப்பு, நிலம் மற்றும் பொது வளங்களின் மீது உரிமை, அடிப்படைத்தேவைகளுக்கான உத்திரவாதம் அனைத்தையும் இழந்து தவிப்பவர்கள் இவர்களே! மேலும் பலவகை அடக்குமுறை வெறிகளினால் தங்களது அடிப்படை வாழ்வுரிமைகளை இழந்து நசுக்கப்படுபவர்களும் இவர்களே!

இத்தகு பாதிக்கப்பட்ட குழுக்களும், அவர்களுக்காக முழுமூச்சாக போராடும் பல்வேறு மக்கள் இயக்கங்களும், அமைப்புகளும், தத்தம் தளங்களிலே தனித்து நின்று போராடுவது பன்னாட்டு சந்தைப் பொருளாதாரச் சக்திகளுக்கும், மேலும் இந்தியத் துணைக்கண்டத்திலும் தமிழகத்திலும் வேறூன்றி வரும் மத, இன, சாதிய, பாலிய வெறி, அடாவடி அதிகாரச் சக்திகளுக்கும் மிகவும் உதவியாக அமைந்து விடுகின்றது. தங்களது பிரித்தாளும் யுக்திகளாலும், தொடர்பு சாதன மாய ஜால வித்தைகளாலும் இச்சக்திகள் நாளுக்கு நாள் பலம் பெற்று வருகின்றன.

**இதனால், இன்றைய சூழ்நிலையிலே, அனைத்து மக்களின் முழு விடுதலையினைத் தேடும் நாம் அனைவரும்,**

- **நமது போராட்டங்களையும் முயற்சிகளையும் இவ்விரு அலைகளோடு இணைத்துப்பார்க்க,**
- **நமது ஆய்வினை ஆழப்படுத்த,**
- **நம்மிடையே உள்ள இணைப்புப் போராட்டத் தளங்களை இனம் காண,**
- **ஒருங்கிணைந்து போராட வேண்டியச் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்.**

பன்னாட்டு நிறுவன ஆதிக்கங்களுக்கும், மத, இன, சாதிய, பாலிய வெறி அடக்குமுறைக் கலாச்சாரத்திற்கும் எதிராக ஒருங்கிணைந்து, முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டிய போராட்டம் இன்றைய காலத்தின் கட்டாயமாக நம் முன் எழுந்து நிற்கின்றது.

மேலும் இவ்விரு அலைகளுக்கெதிராக எடுக்கப்படும் போராட்ட முயற்சிகளிலே மேற்குறிப்பிட்ட நலிந்த மக்கள் குழுவினர்களுடைய நிலைகளும் கோரிக்கைகளும் முதன்மைப் படுத்தப்பட வேண்டியது மிக அவசியம்.

# நமது நிலைப்பாடுகளும் கோரிக்கைகளும்

## மக்கள் இயக்கங்களுக்கு

1. இதுவரை ஆட்சி செய்து வந்துள்ள எந்தக்கட்சியுமே அதிகாரத்திலிருக்கும்போது, நலிந்த மக்களைப் பாதிக்கும் பன்னாட்டு நிறுவன ஆதிக்கங்களுக்கும், மத, இன, சாதிய, பாலிய வெறி அடக்குமுறைக் கலாச்சாரத்திற்கும் எதிராக, தெளிவாக செயல்படாத சூழ்நிலையிலே, **நலிந்த மக்களின் அடிப்படைத் தேவைகளை மையப்படுத்தும் ஒரு அரசியலை, தமிழகத்தில் உருவாக்கும் பணியிலே மக்களியக்கங்களின் பங்கும் பொறுப்பும் அதிகரிக்கின்றன.**

2. சென்ற பத்தாண்டுகளில், மத்திய அரசின் உந்துதலோடும், உதவியோடும் தமிழக அரசு முன்னெடுத்துச் சென்றுள்ள **புதிய பொருளாதாரக் கொள்கையின் பல்வேறு அம்சங்களையும், மக்களெதிர் கோட்பாடுகளையும், மக்கள் இயக்கங்களும், அமைப்புகளும் ஆய்வுகளுக்கு உட்படுத்தி, அவற்றிற்கு எதிரான போராட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.**

3. முக்கியமாக, பன்னாட்டு நிறுவன ஆதிக்கங்கள் தமிழகத்தின் ஒவ்வொரு துறையிலும், தளத்திலும் ஊடுருவி, நலிந்த மக்களான பெண்கள், தலித்து மக்கள், பழங்குடியினர், சிறு மீனவர்கள், குழந்தைகள், நகர்வாழ் குடிசை மக்கள், தொழிலாளர்கள், முக்கியமாக கூலி விவசாயிகள் மற்றும் அமைப்பு சாராத் தொழிலாளர்களது **அடிப்படை உரிமைகளையும், வாழ்நிலைகளையும் நிர்மூலமாக்கும் போக்கினை, தள ஆய்வுகளின் அடிப்படையில், அரசுகளுக்கும் கட்சிகளுக்கும் சவால்களாக நிலைநிறுத்தும் முயற்சிகளிலே இயக்கங்களும், மக்கள் அமைப்புகளும் ஈடுபட வேண்டும்.**

4. பல்வேறு துறைகளிலும், தளங்களிலும் போராடிவரும் இயக்கங்களும் மக்கள் அமைப்புகளும், தமிழகத்தின் அனைத்துத் தளங்களிலும் ஊடுருவி நிற்கும் மத, இன, சாதிய, பாலிய அடக்குவெறிக் கலாச்சாரத்தின் கூறுகளைத் தகர்க்கும் வகையிலே, **சாதியற்ற, ஏற்றத்தாழ்வுகள் குறைந்த, ஆண்-பெண் சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் பணியிலே இணைந்து செயலாற்ற வேண்டும்.**

## கட்சிகளுக்கும், அரசுகளுக்கும்

1. அந்நியச் செலாவணி ஈட்டுதல், பன்னாட்டு நிறுவனங்களின் தொழில் நுட்பங்களை இறக்குமதி செய்தல், இவற்றினை மையப்படுத்தும் **புதிய பொருளாதாரக் கொள்கை கைவிடப்பட்டு, பெருவாரியான மக்களின் அடிப்படைத் தேவைகள், வேலைவாய்ப்பு, தரமான கல்வி, சுகாதாரம், சுற்றுப்புறச்சூழல்பாதுகாப்பு போன்றவற்றினை மையப்படுத்தும் வகையிலே, கிராம சபைகளிலிருந்து மேல்நோக்கி பொருளாதாரத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.**

2. தமிழகத்தின் பெருவாரியான மக்களின் வேலைவாய்ப்புக்கும், பொருளாதார மேம்பாட்டுக்கும் அடிப்படையான **விவசாயம், மற்றும் சிறு தொழில்கள் பெரிதும் புறக்கணிக்கப்படும் போக்கு முற்றிலும் மாற்றப்பட்டு,** இத்துறைகளை வளர்க்கும் வகையிலே, திட்டங்களும், நிதிப்பங்கீடுகளும் செயல்முறைப்படுத்தப்பட வேண்டும்.

3. உலக வர்த்தக நிறுவனம் மற்றும் பன்னாட்டு நிதி, தொழில் நிறுவனங்களுடன் மத்திய அரசும், மாநில அரசும் நிறைவேற்ற விரும்பும் எந்த **உடன்பாடுகளும், நிபந்தனைகளும், ஒளிவுமறைவின்றி பாராளுமன்றத்திலும் சட்டசபையிலும் சமர்ப்பிக்கப்பட்டு,** பொதுமக்களின் கருத்துக்களின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே நிறைவேற்றப்பட வேண்டும்

4. மின்சக்தி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் போன்ற பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கவோ, பன்னாட்டு நிறுவனங்களின் முதலீட்டுக்கு முன்னுரிமை கொடுக்கவோ, எடுக்கப்படும் முயற்சிகள் சீரிய பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, **தொழிலாளர்களின் பணி உத்திரவாத உரிமைகள் முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.**

5. இந்திய பாரம்பரிய வளங்களைக் காக்கும் வகையிலே, வலுவாக அமைந்துள்ள **1970ம் ஆண்டின் இந்திய முத்திரைச் சட்டத்தினை மாற்றுவதற்கான முயற்சியை மத்திய அரசு கைவிட வேண்டும்.** பெரும்பான்மை மக்களின் நலம், சுற்றுப்புறச்சூழல் மற்றும் இயற்கை வளங்களின் பாதுகாப்பு இவற்றினைப் பாதுகாக்கும் வகையிலே, அனைத்துச் சட்டங்களும் நிலைநிறுத்தப்பட வேண்டும். **இவ்விசயங்களில் மத்திய அரசு சரியான முடிவுகளை எடுக்கும் வகையிலே தமிழக மாநில அரசு வலியுறுத்த வேண்டும்.**

6. புதிய பொருளாதாரக்கொள்கையின்படி, **கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகத்துறை களுக்கான நிதியாதாரங்களை படிப்படியாக குறைத்துவரும் மத்திய, மாநில அரசுகளின் போக்கு மாற்றப்பட வேண்டும்.**

7. புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையிலே, மாநில அரசும், மத்திய அரசும் தங்களுடைய கடமைகளிலிருந்து விலகி, **கல்வி மற்றும் சுகாதாரத்துறை நிறுவனங்களை தனியார் கைகளில் ஒப்படைக்கும் போக்கும், இத்துறைகளிலே பெருமளவில் தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் போக்கும் கண்டிக்கத்தக்கது.** மேலும், அரசு அங்கீகாரம் மற்றும் அனுமதியின்றி இயங்கும் தனியார் கல்வி மற்றும் மருத்துவ நிறுவனங்களைச் சட்ட வரையறைகளுக்குள் கொண்டுவர முயற்சிகள் உடனே எடுக்கப்பட வேண்டும்.

8. **பெரும்பான்மை ஏழை மக்களின் உணவு உத்திரவாதத்திற்கு உறுதுணையான பொது விநியோக முறையினைத்** தகர்த்து, நிர்மூலமாக்கும் வகையிலே மத்திய அரசு வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் பல்வேறு செயல்களிலே ஈடுபட்டிருக்கின்றது. இப்போக்கினை தமிழக மாநில அரசு வன்மையாகக் கண்டிக்க வேண்டும். மேலும் தமிழகத்திலே ஏழை மக்களின் உணவு உத்திரவாதத்திற்கு வழியமைக்கும் வகையிலே, ஊழலற்ற பொது விநியோக முறை, முக்கியமாக கிராமப்புறங்களில் நிலை நிறுத்தப்பட வேண்டும்.

9. புதிய பொருளாதாரக் கொள்கையினால் **தமிழகத்திலே வேலைவாய்ப்புகள் பெரிதும் குறைந்து வரும் சூழ்நிலையிலே,** அனைவருக்கும் வேலை ஓர் அடி.ப்படை உரிமை என்னும் வகையிலே, ஒரு வேலை உத்திரவாதச்சட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும். மேலும் பொதுத்துறைகளில் நிலவி வருவது போலவே, **பெருகிவரும் தனியார்த் துறைகளிலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடுகள் நிலை நிறுத்தப்பட வேண்டும்.**

10. **அனைவருக்கும் பத்தாம் வகுப்பு வரையிலாவது இலவச, கட்டாய, தரமான கல்வியினை அடிப்படை உரிமையாக்கிடும் வகையிலே,** மத்திய அரசும், தமிழக அரசும், சட்டத்திருத்தங்களை உடனடியாக அமுல்படுத்த வேண்டும். குறிப்பாக 1994ம் ஆண்டின் தமிழ்நாடு கட்டாயக்கல்விச்சட்டம் முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட வேண்டும். நாட்டின் மொத்த உற்பத்தி, வருவாயில் குறைந்தது 6 சதவீதமாவது கல்விக்காக ஒதுக்கப்பட வேண்டும்.

11. பல தேசியங்களை உள்ளடக்கிய துணைக்கண்டமான இந்தியாவிலே, அதிகாரக்குவியல்களை மத்தியிலே குவிக்கும் போக்குக் கூடிவருகின்ற சூழ்நிலையிலே, **பல்வேறு தேசிய மாநிலங்களின் உண்மைத்தேவைகளும், எதிர்பார்ப்புகளும் மதிக்கப்படும் வகையிலே, நிதி, அதிகாரப்பகிர்வுகள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.**

12. **தமிழ் மற்றும் அனைத்து மாநில மொழிகளும் தேசிய மொழிகளாக அறிவிக்கப்பட்டு மாநிலங்கள் தன்னிச்சையாக இணைந்து நிற்கும் கூட்டாட்சியாக (Federal Government),** இந்திய அரசமைப்பு மாறும்வகையிலே, அரசியல் சட்டத்திலே மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். இவ்விசயங்களிலே அனைத்துக்கட்சிகளும், தமிழக அரசும் தங்களது நிலைப்பாடுகளைத் தெளிவாக அறிவிக்க வேண்டும்.

13. மாநில அரசினையே முழுமையாக சார்ந்து நிற்க வேண்டிய நிர்ப்பந்தங்களால், நலிவுறும் கிராம, மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகள், உண்மையாகவே மக்களின் அதிகாரத் தளங்களாக மாறும் வகையிலே, **மத்திய அரசு அறிவித்துள்ள 29 துறைகளிலும் அதிகாரங்கள் மாநில அரசிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்பட வேண்டும்.** இதனடிப்படையில் 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், முழுவதுமாக மாற்றப்பட்டு, விதிமுறைகளும் அறிவிக்கப்பட வேண்டும். மேலும் தமிழக அரசு தனது நிதியிலிருந்து குறைந்தது 40 முதல் 50 சதவீதத்தை முறைப்படி, உரிமையடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர வேண்டிய மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

14. **உள்ளாட்சி அமைப்புகளிலே பெண்கள், தலித்துமக்கள் மற்றும் பழங்குடியினருக்கு உரிய தலைமைப்பதவிகள் வழங்கப்பட்டிருப்பினும், அவர்கள் தன்னிச்சையாக, உரிமையுடன் தங்களது கடமைகளை ஆற்றுவதற்கு எதிராகவும், தடையாகவும் பல்வேறு சமூக, நிறுவன இடையூறுகள் தொடர்கின்றன.** இவற்றினைப் போக்குவதிலே தமிழக அரசும், பல்வேறு கட்சிகளும், அரசு நிறுவன ஊழியர்களும் பொறுப்பெடுத்து ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

15. இந்திய மக்களை மதத்தின் பெயரால் பிரித்து, **சிறுபான்மையினரை எதிரிகளாகவும், அந்நியர்களாகவும் காட்டி, மக்களிடையே வெறுப்புணர்ச்சியை மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் ஏற்படுத்தும்** இந்துத்துவ சக்திகளையும், அமைப்புகளையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

16. **பள்ளிகளிலே "Sarva Shiksha Abhigyan" போன்ற பிற்போக்குவாத பாடதிட்டங்களையும், இந்துத்துவ கருத்துக்களையும், செயல்பாடுகளையும் திணிக்க முயலும்,** மத்திய அரசின் போக்கினையும், வரலாற்று ஆய்வுத்துறை மற்றும் பல்வேறு பண்பாட்டுத் துறைகளில், மத அடிப்படைவாதக் கண்ணோட்டம் கொண்டோரை நியமிக்கும் போக்கினையும், தமிழக அரசும் அனைத்துக் கட்சிகளும் கண்டிக்க வேண்டும், மற்றும் ஒரே தரமுள்ள கல்வி, அனைவருக்கும் கிடைக்கும் வகையிலும், **தாய்மொழிக்கல்வி முதன்மைப்படுத்தப்படும் வகையிலும்** சட்டமாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

17. மேலும் **சிறுபான்மை மதத்தினரிடையே, மதவெறியினையும், வன்முறைக் கலாச்சாரத்தையும் தூண்டிவரும் நபர்களையும் அமைப்புகளையும்** ஜனநாயக முறையிலே, மனித உரிமைகளுக்காக, மதச்சார்பற்ற போராட்டங்களோடு இணைந்து போராடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

18. கடந்த சில ஆண்டுகளிலே தமிழகம் ஒரு போலீஸ் அடக்குமுறை மாநிலமாகவே உருவெடுத்து வந்துள்ளது. காவலில் சித்திரவதை, மரணம் என்பவை தமிழ் நாளேடுகளில் செய்திகளாக இருப்பினும், இந்தச் சூழ்நிலையிலும், மத்திய அரசு உடனடியாக **சித்திரவதை, மனித உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடு சபை அமைப்புக்களின் ஒப்பந்தங்களிலே** கையொப்பமிட்டு, அங்கீகரிக்க வேண்டுமென்று, மாநில அரசும், அனைத்துக்கட்சிகளும் நிர்ப்பந்திக்க வேண்டும்.

19. எந்த உரிமைக்குரலையும் **தடுப்புக்காவல் சட்டம்** வழியாக ஒடுக்கப்படுவதும், மீறிக் குரல் கொடுப்போரைச் சிறையிலடைப்பதும் மற்றும் சாதாரண மக்களின் வாழ்நிலைகளும், சொத்துக்களும் அடாவடியாக அடித்து நொறுக்கப்படுவதும் பெருகிவரும் சூழ்நிலையிலே, **இச்சட்டங்கள் பற்றிய உச்சநீதிமன்றத்தின் கட்டளைகளும் பரிந்துரைகளும்** முழுமையாக கையாளப்பட வேண்டும். மேலும் காவல்துறையில் மாற்றங்கள் பற்றிய தேசிய காவல்துறை குழுவின் பரிந்துரைகள் அனைத்தையும், தமிழக அரசு உடனே அமலுக்குக் கொண்டு வரவேண்டும்.

20. தமிழகத்திலே ஏற்படுத்தப்பட்டுள்ள **தமிழக மாநில மனித உரிமைக்குழு, தமிழக மாநில பெண்கள் குழு, தமிழக மாநில சிறுபான்மையினர் உரிமைக்குழு** என்ற உரிமைக்குழுக்கள் மூன்றுமே, உரிமைப்போராட்டங்களில் ஈடுபட்டிருப்போரின் அனுபவப்படி, ஏறக்குறைய பொம்மைகளே! இவற்றிற்கு வேண்டிய சட்டபூர்வமான அதிகாரங்களோ, நிதிகளோ கிடையாது! சட்ட ரீதியான அதிகாரங்கள் இருக்கும்போதும் கூட, அவற்றைப் பயன்படுத்த முடியாதவகையிலே இவைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இம்மூன்று குழுக்களும் தன்னிச்சையாக, போதிய நிதி ஆதாரங்களுடன், மக்களின் உரிமைகளைக் காக்கும் அரண்களாக மாறும் வகையில் சட்டச் சீர்திருத்தங்கள் கொண்டு வரவேண்டும்.

## துறைவாரியாக நமது கோரிக்கைகள்

### அ. பெண்கள்

1. **ஐக்கிய நாடுகள் சபை அமைப்பின், பெண்களுக்கு எதிரான அனைத்து வடிவங்களிலுமான பாகுபாட்டு ஒழிப்பு உடன்பாட்டின் (CEDAW) கண்ணோட்டத்தில்** தமிழக அரசின் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் திட்டங்கள் அனைத்தும் முழுமையுமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

2. பெண்களுக்கெதிரான வன்முறை வழக்குகளைத் துரிதமாக விசாரித்து, குற்றவாளிகள் தண்டிக்கப்படும் வகையிலே **தனி நீதிமன்றங்கள்** அமைக்கப்பட வேண்டும். **குடும்ப வன்முறையிலே ஈடுபடுபவர்களைத் தண்டிக்கும் வகையிலே ஒரு சட்டம்** கொண்டுவரப்படவேண்டும்.

3. **அந்நிய முதலீட்டு நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதி சார்ந்த தொழில் நிறுவனங்களில் வேலை செய்யும் பெண்களுக்கு,** பாதுகாப்பான சூழல், அடிப்படை சமக்கூலி, மற்றும் தொழிலாளர் உரிமைகள் நிலைநிறுத்தப்படும் வகையிலும், விதிமுறைகளைக் கடைபிடிக்காத நிறுவனங்கள் தண்டிக்கப்படும் வகையிலும் சட்டங்கள் இயற்றப்பட்டு, அமுலாக்கப்படவேண்டும்.

4. **பணியிடங்களில் நடைபெறும் பாலியல் குற்றங்கள்** பற்றிய புகார்களை விசாரிக்க, உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, உயர்மட்டக் குழு ஒன்றை அமைக்கவேண்டும்.

5. **பெண் சிசுக் கொலைகளை** தமிழகத்தில் இருந்து முழுவதுமாக ஒழிக்கும் விதத்தில், 1994ம் ஆண்டின் "பிறக்கப்போகும் குழந்தையின் நிலை கண்டறிய உதவும் தொழில்நுட்பச் சட்டம்" (முறைப்படுத்தலும், தவறாக உபயோகப்படுத்துவதை தடுத்தலும்) கடுமையாக அமுலாக்கப்பட வேண்டும். மேலும் பெண் சிசுக்களை கண்டறிந்து கொல்ல உதவும் அங்கீகாரமற்ற நிறுவனங்கள் அனைத்தும் உடனடியாக மூடப்பட வேண்டும்.

6. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பெண்களுக்கு உரித்தான உள் ஒதுக்கீட்டு உரிமைகளுடன், அரசின் எல்லாத் துறைகளிலும் **பெண்களுக்கு குறைந்தது 33 சதவீத இட ஒதுக்கீடு கிடைப்பதற்கான மசோதா** உடனே சட்டமாக்கப்பட வேண்டும். அனைத்து கட்சிகளும் தங்களுடைய பல்வேறு அமைப்புகளிலும், தேர்தல் தளங்களிலும், இத்தகைய ஒதுக்கீட்டினை உடனே வழங்க வேண்டும்.

7. அதிகாரத்தில், முக்கியமாக **உள்ளாட்சி அமைப்புகளில் தலைமை வகிக்கும் பெண்கள்** தன்னிச்சையாக, தங்களது கடமைகளையும் உரிமைகளையும் நிலைநாட்ட உதவும் வகையிலே, வேண்டிய அனைத்து பாதுகாப்புகளும் வழங்கப்பட வேண்டும்.

8. பெண்களின் வறுமை நிலை மற்றும் அவர்கள் மீதான வன்முறைகளுக்கு பெரிதும் காரணமாக உள்ள **கள்ளச்சாராயத்தை** தமிழகத்தில் அடியோடு ஒழிக்கும் வகையிலே சட்டங்கள் கடுமையாக இயற்றப்பட வேண்டும். மேலும் இத்தொழிலில் ஈடுபடுவோர் அனைவரையும், இவர்களுக்கு பின்புலமாக உள்ள அரசியல்வாதிகளையும், கட்சித்தலைவர்களையும் தண்டிக்கும் வகையிலே சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

## ஆ. தலித்துகள்

1. தலித்துகளுக்கு சொந்தமான ஆனால், அவர்களுக்கு வந்து சேராத இலட்சக்கணக்கான ஏக்கர் **பஞ்சமி நிலங்களைப் பற்றி** மாநிலம் முழுவதும், கிராமந்தோறும் ஆய்வு செய்து, தலித் மக்களுக்கு உடனே திருப்பிக்கொடுக்க ஆவன செய்ய வேண்டும். அந்நிலங்களைப் பயன்படுத்த வேண்டிய எல்லா நிதி உதவிகளையும் அரசு முன்னின்று செய்ய வேண்டும்.

2. தலித் மக்களுக்கு இழைக்கப்படும் தீண்டாமைக் கொடுமைகள், இன்றும், சமூக அளவிலே தடுக்கப்படாத நிலை நீடிக்கின்ற சூழ்நிலையிலே, **"1989ம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம்"** சீரிய முறையில் அமலாக்கப்பட வேண்டும். இக்கொடுமைகளைச் செய்யும் குற்றவாளிகள் உரிய தண்டனை பெறும் வகையிலே, சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும்.

3. **தலித் மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை**, படிப்பு மற்றும் உணவு விடுதிக்கான மொத்த செலவில், குறைந்தது 35 முதல் 40 சதவீதம் தொகையாக உயர்த்தித்தரப்பட வேண்டும். அதையும் கல்வியாண்டின் தொடக்கத்திலேயே தருவது மாணவர்களின் கல்விச்சூழலுக்கு உதவியாக இருக்கும்.

4. புதிய பொருளாதாரக் கொள்கையினால் மேலும் வேலைவாய்ப்புகளை இழந்து நிற்கும் தலித் மக்களுக்கு, அரசு பொதுத்துறை தொழில் நிறுவனங்களிலே அவர்களுக்குரிய வாய்ப்புக்கள் முழுமையாக அளிக்கப்படவேண்டும். தமிழக அரசுத்துறைகளில், நிரப்பப்படாது தொடர்ந்து காலியாகவே வைக்கப்பட்டுள்ள தலித்து மக்களுக்குரிய இடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும்.

5. **தனியார் துறைகளிலும் தலித் மற்றும் பழங்குடியினருக்கான விகிதாச்சார ரீதியில் வேலைவாய்ப்புக்கள் கிடைக்க** சட்டம் இயற்ற வேண்டும்.

6. தலித் மக்களுக்கான இட ஒதுக்கீடு, வேலை வாய்ப்புகள், கல்வி வசதிகள் போன்றவற்றில் தொடரும் **மத அடிப்படையிலான வேறுபாடுகள் நீக்கப்படும் வகையிலே** சட்டங்களை ஏற்படுத்த தமிழக மாநில அரசும், மத்திய அரசும், அனைத்துக்கட்சிகளும் உடனடியாக முயற்சிகள் எடுக்க வேண்டும்.

## இ. பழங்குடியினர்

1. பழங்குடியினரின் நலன்களைப் பாதுகாக்கும் **இந்திய அரசியல் சட்டத்தின் 5வது அட்டவணைப் பகுதியை** நீக்குவதிலே மத்திய பாரதிய ஜனதா கட்சி அரசு மும்முரமாக இருக்கிறது. இதனை தமிழக அரசும், அனைத்துக்கட்சிகளும் முழுமையாக எதிர்க்க வேண்டும்.

2. பழங்குடியினருக்கு நீதி கிடைக்க உறுதி அளிக்கும் வகையில் **"1989ம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டப்படி"** வழக்குகள் தொடரப்படவும், உரிய தண்டனை, நீதி வழங்கப்படவும் சிறப்பு நீதி மன்றங்கள் நிறுவப்பட வேண்டும்.

3. **அரசு பணியிடங்களில் பழங்குடியினருக்கென ஒதுக்கப்பட்டு, காலியாக உள்ள இடங்களை** நிரப்ப தேவையான சிறப்பு ஏற்பாடுகளை கால வரையறையிட்டு தமிழக அரசு உடனே செய்ய வேண்டும்.

4. **பழங்குடியினருக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள்** மற்றவர் கைகளுக்கு மாறி வருகின்றன. அவற்றைத் தடுப்பதற்கான, சட்ட ரீதியிலான மாற்றங்கள், செயல்முறைகள் முதன்மைப் படுத்தப்பட வேண்டும்.

## ஈ. குழந்தைகள்

1. தமிழகத்திலே **சிக்கலான சூழ்நிலைகளிலே மாட்டித் தவிக்கும்** குழந்தைத் தொழிலாளர்கள், தெரு ஓரச் சிறார்கள், சித்ரவதைக்குள்ளாக்கப்பட்ட அனாதை மற்றும் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள், பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்ட குழந்தைகள், சட்டச் சிக்கல்களில் மாட்டித் தவிக்கும் குழந்தைகள், உடல் ஊனமுற்ற குழந்தைகள். எச்.ஐ.வி. நோய்க் கிருமிகளால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் போன்றவர்களின் **உண்மையான நிலை பற்றி ஆய்வுகள்** மேற்கொள்ளப்பட்டு, அந்த ஆய்வுகள் அடிப்படையில் செயல்திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்.

2. **ஐக்கிய நாடுகள் சபை அமைப்பின் குழந்தைகளின் உரிமைகள் மீதான உடன்படிக்கை**யின் கண்ணோட்டத்தின்படி தமிழகத்திலே குழந்தைகள் நலத்திற்கான ஒட்டுமொத்த கொள்கை உருவாக்கப்பட வேண்டும்.

3. **"1986ம் ஆண்டு குழந்தைத் தொழிலை தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம்"** குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவோர் கடுமையான முறையில் தண்டிக்கப்படும் வகையிலே மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

4. **குழந்தை காப்பகங்கள்** தரமான முறையிலே அடிப்படை வசதிகளுடன், குழந்தை வளர்ச்சிக்கு உதவும் மையங்களாக மாற்றப்படும் வகையிலே, தமிழக அரசு அதிக நிதி ஒதுக்க வேண்டும்.

5. **“சிறார் நீதி (கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000” -** குழந்தைகளை குற்றவாளிகளாகப் பார்க்கும் அடிப்படைக் கண்ணோட்டத்திலிருந்து மாற்றப்பட்டு குழந்தைகளின் வளர்ச்சிக்கு சாதகமான முறையிலே திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

6. சிறு சிறு குற்றங்கள் செய்த குழந்தைகளையும் திருத்துவதற்காக என்று செயல்படும் அரசின் **கூர்நோக்கு இல்லங்கள்** சிறை போன்ற நிலையில் இருந்து மாற்றப்பட்டு, குழந்தைகளின் எதிர்கால வாழ்வை மையப்படுத்தும் இல்லங்களாக உருவாக்கம் பெற வேண்டும்.

## உ. மீனவர்கள்

1. இந்திய எல்லைக்குள் வந்து மீன்பிடிக்க **பன்னாட்டுக் கப்பல்கள்** அனுமதிக்கப் பட்டிருப்பது உடனே நிறுத்தப்பட வேண்டும்.

2. **சிறிய, குறு மீனவர்களின் நலன் பாதுகாக்கப்படும் வழியிலே** மாநில மற்றும் மத்திய அரசுகளின் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

3. மீனவ சமுதாயத்தையும் கடற்கரை, சுற்றுப்புறச்சூழலை பாதிக்கும் எந்தவொரு தொழில்கள், (எ.கா.) இறால் பண்ணைகள், சுற்றுலாத்தளங்கள் போன்ற பல்வேறு முயற்சிகளும் **உயர்நீதி மன்றத்தின் சட்டங்களுக்கு உட்பட்டு,** அப்பகுதியில் உள்ள மக்கள் பிரதிநிதிகள், மற்றும் **கிராமப்பஞ்சாயத்துக்களின் அனுமதியுடன்** மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

## ஊ. நகர்ப்புற குடிசைவாழ் மக்கள்

1. குடிசைமாற்று வாரியக் குடியிருப்புப் பகுதிகளில், போதிய பராமரிப்பு வசதிகளுடன் கூடிய, குழந்தைக் காப்பகம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், மின்சார வசதி போன்ற **அடிப்படை வசதிகளை** அரசு செய்துதர வேண்டும். வீட்டுவசதி வாரியத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளை ஒதுக்கீடு செய்யும்போது **தகுதியுள்ளவர்களுக்கு வழங்கப்படும் வகையிலே,** செயல் திட்டங்களும், விதிமுறைகளும் மாற்றப்படவேண்டும்.

2. நகர்ப்புற குடிசைவாழ் மக்களை எந்தவித வேலை, வாழ்வு உத்திரவாதமின்றி இருக்கும் நிலையிலும் பெருமளவில் அவர்களை இடம் பெயரவைக்கும், **நகர்ப்புற வளர்ச்சித்திட்டங்களனைத்தும்** சீரிய பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். மேலும் இந்திய அரசியல் நிர்ணய சட்ட உரிமைகளின் அடிப்படையில், அடிப்படை உரிமைகள் இழந்த நிலையில் வாழும் மக்களுக்கு, வாழ்நிலைக்கு உரிய சன்மானம், நிவாரணம் ஆகியவை உறுதிப்படுத்தப்படாத வரையில், மேற்கூறிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தக் கூடாது.

3. **கல்நார் கூரைகளால்** உடல்நலக்கேடு எனும் உண்மை ஆய்வுகள் வழியாக தெரிந்த பின்பும்கூட, குடிசைவாழ் மக்களின் மறுவாழ்வு வீட்டு வசதித் திட்டங்களில், கல்நார் கூரை வீடுகள் கட்டுவது நிற்கவில்லை. இதனை உடனடியாகத் தமிழக அரசு மாற்றியமைக்க வேண்டும்.

## எ. தொழிலாளர்கள்

**(முக்கியமாக கூலி விவசாயிகள் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்கள்)**

1. முறையான ஊதியத்துடன்கூடிய உழைப்பு, அனைத்து மக்களின் ஓர் அடிப்படை உரிமை எனும் கண்ணோட்டத்திலே, **உழைப்பு உத்திரவாதச்சட்டம்,** தமிழகத்திலே இயற்றப்பட்டு சீரிய முறையிலே அமுலாக்கப்பட வேண்டும்.

2. **குறைந்தபட்ச ஊதியம், ஆண்-பெண்களுக்கு சம தொழிலுக்கு சம ஊதியம்** போன்றவை, பல துறைகளிலே சட்டங்கள் வழியாக நிர்ணயிக்கப்பட்டிருப்பினும், நடைமுறையில், பெருமளவுக்கு அவை கடைபிடிக்கப்படுவதில்லை. இந்நிலையினை மாற்றும் வகையிலே சட்டங்களும், நிர்வாக ஒழுங்கு முறைகளும் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

3. பல தொழிற்கூடங்கள் மற்றும் கல்குவாரிகளில் தொடர்ந்து நீடித்து வரும் **கொத்தடிமை முறையினை** தமிழகத்திலிருந்து முற்றிலும் ஒழிக்கும் வகையில், கடுமையான விதிமுறைகளைக் கொண்ட சட்டவடிவத்தை உருவாக்கி, அமுலாக்கி, அவற்றை மீறுவோருக்கு கடுமையான தண்டனை கிடைக்கும் வகையில் அரசு இயந்திரம் முடுக்கிவிடப்பட வேண்டும். மேலும் விடுதலை பெறும் கொத்தடிமைத் தொழிலாளருக்கு தகுந்த **மறுவாழ்வுத் திட்டங்களை** வகுத்துச் செயல்படுத்தி, தொடர்ந்து வரையறுக்கப்பட்ட கால எல்லை வரை, அரசின் கவனத்தில் வைத்து பாதுகாத்திட அரசு ஆவன செய்ய வேண்டும்.

4. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நலச் சட்டங்களின் வழியாகக் கிடைக்கக்கூடிய உரிமைகள், பலன்கள் அனைத்தும் சட்ட ரீதியில் வழங்கப்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள **உடலுழைப்போர் பாதுகாப்புச் சட்டத்தை** அமல்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. தொழிலாளர் நலச் சட்டங்களை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சிகளைத் தகர்த்து, அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் உருவாக்கப்பட்டுள்ள **வாரியங்களுக்கான கொள்கை நடைமுறைகள்** சீரிய முறையில் வகுக்கப்பட வேண்டும். இவை தமிழ்நாடு உடலுழைப்போர் சட்டத்தில் சொல்லப்பட்ட அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாகவும், உத்திரவாதப்படுத்துவதாகவும் வலிமைப்படுத்தப்பட வேண்டும்.

6. நிலமற்ற கூலி விவசாயிகளுக்குரிய அடிப்படை ஊதியம், மற்றும் பல உரிமைகள் அவர்களைச் சென்றடையும்படி, தமிழக அரசின் **கோலப்பன் குழுவின் பரிந்துரைகள்** முழுவதும் ஏற்கப்பட்டு, சட்டங்களும் விதிமுறைகளும் இயற்றப்பட வேண்டும்.

7. **கல் குவாரிகளிலிருந்து** மீட்கப்படும் கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கல்குவாரிகளை ஏலம் எடுக்கும் உரிமைகளை அத்தொழிலாளர்களுக்கே சலுகை விலையில் கொடுக்க அரசு முன்வர வேண்டும். இந்தத் தொழிலாளர்களுக்கும் விபத்துக் காப்பீடு மற்றும் இதர சலுகைகளைத்தர அரசு ஆவன செய்ய வேண்டும்.

8. **பீடி சுற்றும் பெண் தொழிலாளர்களுக்கான** 1993ஆம் ஆண்டின் உச்சநீதிமன்ற தீர்ப்பை, தமிழக அரசு முழுமையாக அமுலாக்க ஆவன செய்ய வேண்டும்.

## ஏ. உடல் ஊனமுற்றோர்

1. மத்திய அரசால் **1996ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஊனமுற்றோர் சட்டத்தினை** போர்க்கால அடிப்படையில் தமிழக அரசு அமல்படுத்தி, அதன் அனைத்துக் கருத்துக்களும் தமிழகத்தில் அரசின் பல்வேறு துறைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இம்மக்களின் நலன்களும் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்.

2. உடல் ஊனமுற்றோர்களைப் பற்றிய சரியான புள்ளிவிபரக் கணக்கெடுத்து, தமிழக அரசு இவர்களுக்கென்று தனியாக **மறுவாழ்வுத் திட்டங்களை** வகுத்து, உதவித் தொகைகள், சமூகப் பாதுகாப்பு வசதிகள், மருத்துவ உதவிகள், மற்றும் ஊன்றுகோல்கள் போன்ற பல்வேறு கருவிகள் கிடைக்கும் வகையிலே செயல்திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்.

3. ஊனமுற்ற குழந்தைகள், மற்றும் ஊனமுற்றோரின் குழந்தைகளுக்கான கல்வி, சுகாதார வசதிகளும், தொழிற்பயிற்சித்தேவைகளும் முன்னிலைப்படுத்தப்பட்டு, மேலும் அவர்கள் தன்னம்பிக்கையோடு சுய வேலைவாய்ப்பு பெறும் வகையில் **அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு** வழங்க அரசு வழிவகை செய்ய வேண்டும்.

4. உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கான **சிறப்பு பள்ளிகளுக்கு அதிக நிதி** ஒதுக்கப்படுவதோடு, இக்குழந்தைகளுக்கான கல்வி உதவித்திட்டங்களை, சமூக நலத்துறையிலிருந்து மாநில பள்ளிக் கல்வித்துறைக்கு மாற்றி, தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும்.

5. உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு, தாழ்வு மனப்பான்மைப் போக்கும் வகையிலே, இக்குழந்தைகள் **மற்ற குழந்தைகளோடு அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் சேர்ந்து படிக்க** அனைத்து வசதிகளையும் (நிதி ஒதுக்கீட்டையும், பள்ளி-வகுப்புச் சூழ்நிலை மாற்றங்களையும், சிறப்பு ஆசிரியர்கள் நியமனங்களையும்) செய்து கொடுக்க வேண்டும்.

பன்னாட்டு நிறுவன ஆதிக்கங்களுக்கும்
மத, இன, சாதிய, பாலிய வெறி அடக்குமுறைக் கலாச்சாரத்திற்கும்
எதிரான

# தமிழக மக்கள் அறிக்கை

## நிலைபாடுகளின் பின்னணி பற்றிய குறிப்புகள்

## பன்னாட்டு தொழில், வணிக, பண்பாட்டு நிறுவன ஆதிக்கங்கள்

**ஆ**சிய மற்றும் ஆப்பிரிக்க, தென்அமெரிக்க மக்களுக்கு, வேற்று நாட்டு அரக்கர்களின் பிடியிலே சிக்குண்டு, நிலைகுலைந்து போகும் அனுபவம் புதிதல்ல.

500 ஆண்டுகளுக்கு முன்பாக, **காலனியம்** எனும் உருவிலே இம்மக்கள் பெற்ற காயங்களின் தழும்புகள் இன்னும் முற்றிலுமாக மறையவில்லை. மேலை நாடுகளின் வசதிகளுக்குக்கேற்ப, நமது பாரம்பரிய தொழிற்கலைகளும் தொழில் நுட்பங்களும் பின்னோக்கித் தள்ளப்பட்டன; நமது நாட்டின் தொழில் முன்னேற்றமும் நசுக்கி ஒழிக்கப்பட்டது. நமது பண்பாடு, வளங்கள், வாழ்வு நியதிகள், அறிவியல் வளர்ச்சி, அனைத்துமே "பிற்போக்குத்தன்மை" என ஒதுக்கி அழிக்கப்பட்டன.

நமது உழைக்கும் மக்களிலே இலட்சக்கணக்கான பேர், அடிமைகளாக மாற்றப்பட்டு வேற்று நாடுகளுக்கு மிருகத்தனமாக கொண்டு செல்லப்பட்டு, அடிப்படை உரிமைகளற்ற நிலைக்குத்தள்ளப்பட்டனர்; அவர்களது அடிமை வாழ்வு வரலாறு, இன்றும் கூட அவர்களது கால்களை விட்டு விலங்காத சங்கிலிகளாகக் கிடக்கின்றன. **காலனியத்தின் வடுக்கள்** இன்னும் எத்தனை எத்தனையோ.

காலனியத்தால் இந்தியாவிலும் ஒரு சிலபேர் பயனடைந்தார்களென்பதும் உண்மைதான். தொழில் அதிபர்களும், பார்ப்பனிய, மற்றும் உயர்சாதி மக்களும், காலனிய அதிகாரத்தோடு கைகோர்த்து, தங்களுடைய வசதிகளைப் பெருக்கிக் கொண்டனர். இவர்கள்தான் 1947-லே சுதந்திரம் எனும் போர்வையிலே, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள்; இன்றும் வெள்ளையர்களை அனுப்பிய கொள்ளையர்களாக வலம் வருகிறார்கள். அவர்களுடைய கைகளிலிருந்து இந்தியாவை மீட்டு, மக்கள் கையிலே கொடுக்கத்தான் இரண்டாவது விடுதலைப் போர் ஒன்று நடந்து வருகிறது - பல்வேறு தளங்களிலே, பல்வேறு வடிவங்களிலே, பல்வேறு வழிகளிலே!

இன்று மீண்டுமொரு '**புது-காலனியம்**' உருவாகியுள்ளது. இரண்டாம் உலகப்போரின் முடிவிலிருந்தே தொடங்கிவிட்ட இந்தப் போக்கு 1980-களில் பெரும் வளர்ச்சியடைந்து 1990-களில் பூதாகாரமாக வளர்ந்து, உலகனைத்தையும், முக்கியமாக ஆசிய, ஆப்பிரிக்க, தென் அமெரிக்க மக்களையும், மேலை நாடுகளிலே ஒடுக்கப்பட்ட மனித சமூகங்களையும், அலைக்கழிக்கின்றது.

உலக வங்கி, பன்னாட்டு நிதி நிறுவனம் உலக வர்த்தக நிறுவனம் போன்ற மிக பலம் பொருந்திய அமைப்புகள், இவ்வாதிக்கப் போக்கினை வளர்க்கின்றன, திட்டமிட்டு முன்னெடுத்துச் செல்கின்றன. 50 ஆண்டுகாலமாக வளர்க்கப்பட்டு, கட்டி காக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை அமைப்பினையும், அதன் பல்வேறு சனநாயக அமைப்புகளையும், சட்ட திட்டங்களையும், பல்வேறு அனைத்துலகப் பிரகடனங்களையும் பின்தள்ளி, தனிப்பட்ட சர்வாதிகார பன்னாட்டு அதிகார முறைகளை நிலைப்படுத்தும் வகையிலே முன்சொன்ன இவ்வமைப்புகள், தந்திரமாக, அரக்கத்தனத்தோடு செயல்படுகின்றன.

முக்கியமாக 1995-ல் உருவெடுத்த உலக வர்த்தக நிறுவனம், ஒரு தன்னிச்சையான, எவ்வித கட்டுப்பாடுமில்லாத உலகளாவிய அரசு இயந்திரம் போலவே செயல்பட்டு வருகிறது. வளரும் நாடுகளும், மற்றைய நாடுகளும் தங்களது மக்களின் சமூக மேம்பாடு, உழைப்போரின் அடிப்படை உரிமைகள், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, சிறிய குடிசைத் தொழில்கள் வளர்ச்சி, உணவு உத்திரவாதம், இவற்றிற்காக ஏற்படுத்தும் சட்டங்களையும் நிதி முறைகளையும் கூட கேள்விக்குள்ளாக்கி, மேலை நாடுகளின் ஆதிக்க வருகைகளுக்கு வழியமைத்துக் கொடுக்கின்றது.

பன்னாட்டு பரிமாணங்களைக்கொண்ட இவ்வமைப்புகள் அனைத்துமே, மேலை நாட்டு அதிகார அரசுகளின், மற்றும் அந்நாடுகளிலே தோன்றும் **பன்னாட்டு தொழில் நிறுவனங்கள்** எனும் பேரரக்கர்களின் கைப்பாவைகளாக மாறி நிற்கின்றன.

இவற்றிலே சுமார் 200 மிகப்பெரிய நிறுவனங்கள், அகில உலகளவிலே உற்பத்தி, வணிகம், நிதி, சொத்துக்கள் அனைத்திலும், அளப்பறிய அளவிற்கு ஆதிக்கம் செலுத்துகின்றன. சமீபத்திய கணக்கெடுப்புகளின்படி, உலகளாவிய வணிகத்திலே இவற்றின் ஆதிக்க அளவிற்கு

ஒரு சில உதாரணங்கள் :

| | | | |
|---|---|---|---|
| கோதுமை | 85-90% | தேயிலை | 80% |
| இரும்புத்தாதுபொருள் | 90-95% | எண்ணெய் | 75% |
| பருத்தி | 85-90% | செம்பு | 80-85% |
| சர்க்கரை | 60% | காப்பி | 80-90% |

இந்தளவிற்கு உணவு மற்றும் வள ஆதாரங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் இந்நிறுவனங்களின் பொருளாதார அளவு, பல தனி நாடுகளின் பொருளாதாரத்தைவிட மிகப் பெரியவை.

ஏற்கனவே இராட்சச அளவிலே செயல்படும் இந்நிறுவனங்கள் தங்களுக்குள் இணைந்து, துறைகள் பலவற்றில் முடிவெடுக்கும், பலமுள்ள சக்திகளாக மாறுகின்றன. தமது பண பலத்தால் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களை முழுமையாக விலைக்கு வாங்கி, இந்நிறுவனங்கள் தங்கள் பலத்தை அதிகரித்துக் கொள்கின்றன.

இந்நிறுவனங்களால் உலக மக்களின் வாழ்விலே ஏற்படும் பாதிப்புகள் பற்றிய ஆய்வுகளுக்குக் குறைவில்லை. ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிறுவனத்தின் (UNDP) 2000ம் ஆண்டின் மனித மேம்பாட்டு அறிக்கை, கட்டுப்பாடற்ற உலகமயமாதலுக்கும், சமூக மேம்பாட்டுச் சீரழிவுகள், ஏற்றத்தாழ்வுகள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்குமான, நெருங்கிய தொடர்பினை தெள்ளத்தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

இத்தகு பன்னாட்டு நிறுவன ஆதிக்கங்களினால் உலகிலே நிலவிவரும் ஏற்றத்தாழ்வுகள், எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு வளர்ந்திருக்கின்றன. 1990-களின் இறுதியிலே உலகிலே பணபலமிக்க 20 சதவீத மக்கள், உலகின் ஒட்டுமொத்த வளங்களிலே 86 சதவீதத்தை அனுபவிக்கிறார்கள் (குறிப்பாக 85% மரவளங்கள், 75% உலோகங்கள், 70% உணவு, 85% எரிபொருள் சக்தி), மீதமுள்ள 14 சதவீத உலக வளங்களே உலகின் பெரும்பாலான 80 சதவீத மக்களுக்குக் கிடைக்கின்றன (15% எரிபொருள் சக்திகள், 25% உலோகங்கள், 30% உணவு, அறிவியல் நுட்பங்களில் 5%). இத்தகைய **ஆதிக்கப் போக்கினால் யார் பயனடைகிறார்கள், யார் பாதிக்கப்படுகிறார்கள் என்பது தெள்ளத்தெளிவு.**

இயந்திரமயமாக்கலினாலும், கணனிமயமாக்கலினாலும் பலம்பெற்ற இந்நிறுவனங்கள் உலகெங்கும் **வேலைவாய்ப்பின்மையை** அதிகரித்துள்ளன. உலகில் உள்ள 26 கோடி உழைப்பாளிகளிலே 0.075% பேருக்கு மட்டுமே இந்நிறுவனங்கள் வேலை கொடுக்கின்றன. வளரும் நாடுகளிலே உள்ள சிறு, பெரிய தொழில்களைச் சிதைப்பதன் மூலம், உலகெங்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை வளர்த்துள்ளன.

இன்று, உற்பத்திப் பொருளாதாரத்தைவிட, கணனியம், மின்இணையம், மின்வணிகம் போன்றவற்றின் அடிப்படையிலே உருவாகியுள்ள சூதாட்டப் பொருளாதாரமே முதன்மைப்படுத்தப்படுகிறது; இதன் மூலம் வளர்ந்துள்ள தரகு, பங்குச்சந்தை, பன்னாட்டு நிதி நிறுவனங்களின் கட்டுப்பாடற்ற போக்கு, உலக வணிக பொருளாதாரத்திலே நிலையற்ற தன்மையினை உருவாக்கியுள்ளது. இது பலருக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் சிலரின் கைகளிலே செல்வத்தைக் குவிக்கின்றது.

வர்த்தக ரீதியிலான அறிவுச் சொத்துரிமைகள் Trade Related Intellectual Property Rights (TRIPs) போன்ற ஒப்பந்தங்களின் வழியாக வளரும் நாடுகளின் **பன்மைத்துவமிக்க இயற்கை வளங்களும், உயிரியல் வளங்களும் அறிவாற்றல் வளங்களும்**, மேலை நாடுகளின் கைகளுக்குப் போய் சேரும் வகையில், உலக வர்த்தக நிறுவனம் இயங்கி வருகிறது.

'உணவில்லாத மக்களுக்கு வேண்டிய அளவு உணவு உற்பத்தியை அதிகரிப்போம்' என்ற போர்வையின்பின் வளர்ந்து வரும் '**உயிரிய தொழில்நுட்பம் மற்றும் மரபணு ஆய்வியல்**'(Bio-Technology & Genetic Engineering) நிறுவனங்களின், கம்பெனிகளின் ஆதிக்கம், பன்னாட்டளவிலே பெரியதொரு பிரச்சனையாக எழுந்துள்ளது. எந்தவித அரசுக்கட்டுப்பாட்டுகளுக்கோ, பொதுக்கொள்கைகளுக்கோ உட்படாத மிகப்பெறும் கம்பெனிகள் இவை.

மேலும் உலக இனங்களுடைய, குழுமங்களுடைய **தாவர விதைச் சொத்துக்களை** தன்வயப்படுத்தும் முயற்சி பெருகி வருகிறது. விதைகளை மலட்டுத்தனத்துக்கு உள்ளாக்கி, விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் விதைப்புக்கு, பன்னாட்டு நிறுவனங்களைச் சார்ந்திருக்கும் வகையில், அமெரிக்க கம்பெனி மன்சாண்டோ போன்ற நிறுவனங்கள், அழித்தொழிக்கும் விதைகள் தயாரிப்பிலே இறங்கியுள்ள உண்மை நாமறிவோம்.

ஒவ்வொரு சமூகத்தின் தாவர, விலங்குகளின் பன்மைத்துவமிக்க 'உயிர் அணுச் சொத்துக்களை', **அதிகார முத்திரைகள் (Patents)** வழியாக கைப்பற்றி அழிக்கும் முயற்சிகள் பெருகியுள்ளன. உலகளவிலே கொடுக்கப்பட்டுள்ள அதிகார முத்திரைகளிலே 97% வளர்ந்த நாடுகள் கைகளிலே உள்ளன. வளரும் நாடுகளிடம் இருக்கும் சிறிய அளவு முத்திரைகளில் கூட 80%, அந்த நாடுகளிலே உள்ள மேலைநாட்டு நபர்களிடமும் நிறுவனங்களிடமும் உள்ளன.

இத்தகைய நிறுவனங்களையும், அவை மேற்கொள்ளும் ஆய்வுகளையும் கண்காணித்து, கட்டுப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபை 1992ல் உருவாக்கிய உயிர் அணு பன்மைத்துவ பிரகடனத்தை(Convention on Biodiversity) அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, அர்ஜென்டைனா, சிலி, உருகுவே நாடுகளடங்கிய மியாமிக்குழு தொடர்ந்து எதிர்த்து வருவதும், பிரகடனத்தைத் தடம் புரள வைக்க முயற்சிப்பதும் உலகறிந்ததே.

இத்தகு புதிய தொழில்நுட்ப முயற்சிகளால் **சுற்றுப்புறச்சூழலுக்கும், மனித உடல் நலத்துக்கும்** ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் அதிகம். ஆனால், இத்தகைய கேள்விகளுக்கு பன்னாட்டு நிறுவனங்களோ, அவற்றுக்கு துணைபோகும் அரசுகளோ பதில் சொல்லத் தயாராக இல்லை. வளரும் நாடுகளில் உள்ள சட்ட முறைகளும் வலுவாக இல்லாத காரணத்தினால், ஏழை நாடுகளின் விளை நிலங்களிலே, இவற்றிற்கான பரிசோதனைகளும் தொடர்ந்து நிகழ்கின்றன. சில சமயங்களில் அந்நாடுகளின் அரசுகளுக்குத் தெரியாமல் கூட இவை தொடர்கின்றன.

உணவு உற்பத்தி அதிகரிப்பினால் மட்டும் பஞ்சங்கள் தீர்வதில்லை. நிறைந்து வழியும் உணவுக் களஞ்சியங்கள் ஒருபுறமும், பட்டினிச்சாவுகள் மறுபுறமும் இணைந்தே நடப்பது உலகறிந்த உண்மை. உணவு உற்பத்திக்கான அதிகாரங்களும், வாய்ப்புகளும் வசதிகளும் மக்கள்மயமாக்கப்படுவதே, பரவலான உணவு உத்திரவாதத்திற்கானவழி!

**பண்பாடும் கலாச்சாரமும்கூட** இன்று உலகமயமாக்கப்படுகின்றன. அமெரிக்காவின் ஏற்றுமதிகளிலே முதலிடம் வகிப்பது விமானங்களோ, கம்ப்யூட்டர்களோ அன்று; சினிமாப்படங்களும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுமே. உலகினை ஒருமித்த கிராமமாக இணைக்கும் கருவியாகத் தூக்கி நிறுத்தப்படும் இண்டெர்நெட் கூட உலகமக்கள் தொகையில் வசதிபடைத்த 17% பேர்களால் தான் பயன்படுத்ததப்படுகிறது. மற்றொரு புறம் உலகிலேயே 100 கோடி மக்கள் எழுத்தறிவு இல்லாத அவலநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

அதே சமயம் இத்தகைய பண்பாட்டு ஏற்றுமதிகள், உலகமயமாதலின் பலமிக்க துணைக்கருவிகளாக அமைந்துவிடுகின்றன. முக்கியமாக நடுத்தர, இளைஞர் சமுதாயத்திலே, சமுதாய மதிப்பீடுகளற்ற, தன்னல, நுகர்வுக் கலாச்சாரத்தை பெரிதும் வளர்க்கின்றன. உழைக்கும், போராடும் மக்கள் மத்தியிலும் இவை புதிய போதைப்பொருட்களாக வலம் வருகின்றன.

உலகிலே கோடிக்கணக்கான மக்கள் அடிப்படை ஆரம்பக் கல்வி கூட இழந்து நிற்கும் சூழ்நிலையிலே, ஆகாயத்தில் நாடுவிட்டு நாடு பரவும் இப்புதிய நிறுவனங்கள், 'உலகமயமாதலை' மானுடத்தின் வெற்றியென மக்கள் தொடர்பு சாதனங்கள் வழியாக பறைசாற்றுகின்றன, இவை நடுத்தர மக்களையும், முக்கியமாக இளைஞர்களையும் தங்களது மாய வலைகளிலே, கனவுலகுகளிலே கட்டிப்போடுகின்றன. மேலும் 'இதைவிட்டால் வேறு வழியில்லை', இதுவே ஏற்றத்தாழ்வுகளுக்கும், வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் பதில்□ போன்ற அபத்தமான கருத்துகளும் வலியுறுத்தப்படுகின்றன.

ஆனால், ஆப்பிரிக்க, தென் அமெரிக்காவின், 1980-களின் அனுபவங்களும், ஆசியாவின் 1990-களின் அனுபவங்களும், இந்தக் கருத்துக்களை முழுமையாக கேள்விக்குள்ளாக்கி இருக்கின்றன.

## உலகமயமாதலும் இந்தியாவும்

வெள்ளையரிடமிருந்து விடுதலை பெற்றபிறகு 'சமத்துவம்' 'மதச்சார்பின்மை' 'தனி இறையான்மை' போன்ற மதிப்பீட்டுக் கோட்பாடுகளை, பெயரளவுக்காகவாவது வைத்திருந்த இந்திய அரசு, 1990களின் துவக்கத்திலே வெளிப்படையாகத் தூக்கி எறிந்துவிட்டது. **1980-களிலே விதைக்கப்பட்ட புதிய நச்சு விதைகள் 1990-91ல் அதிகார முத்திரை பெற்றன.** 'புதிய பொருளாதாரக் கொள்கை' 'தனியார்மயமாக்கல்', 'கட்டுப்பாடற்ற வணிகம்' போன்ற பேர்களைத் தாங்கிக்கொண்டு, பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கப் போக்குகள், இன்று குக்கிராமங்களிலும் பட்டிதொட்டிகளிலும்கூட தன் அரக்கக் கைகளை நீட்டி ஆதிக்கம் செய்யுமளவுக்கு வளர்ந்திருக்கின்றன.

1991ம் ஆண்டிலே, அப்போது ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசு, உலகவங்கி, சர்வதேச நிதி நிறுவனம் ஆகியவற்றின் வற்புறுத்தலால், அண்டைய ஆதிக்க சக்திகளின் காலடியிலே இந்திய மக்களின் இறையாண்மையினை அடகுவைத்தது. அதே அடிமைப்போக்கு, 'சுதேசி' நாடகமாடும் பாரதிய ஜனதா கட்சியினாலும் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. 'தனியார் மயமாக்கல்', 'வெளிநாட்டினரின் முதலீடுகள்', 'பன்னாட்டு நிறுவனங்களுக்கு முழு வரவேற்பு', 'பங்குச்சந்தைகளின் முதன்மைத்துவம்', இவையே அரசுகளின் மற்றும் அனைத்துக்கட்சிகளின் தாரக மந்திரங்களாகிவிட்டன.

1995ம் ஆண்டு இந்திய அரசு, தன்னுடைய 1992-97 ஆண்டின் ஏற்றுமதி இறக்குமதி கொள்கையினை உலக வர்த்தக நிறுவனத்தின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ற முறையில் மாற்றியமைத்தது. 1997ல் வெளியிடப்பட்ட 1997-2000ம் ஆண்டுக்கான கொள்கையும் இவ்வாறே உருவாக்கப்பட்டது. இதன் காரணமாக, மற்ற நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்கள் மீது இருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, திறந்த பொது அட்டவணைக்குள் இப்பொருட்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்தியா தனது ஏற்றுமதிகளை உலகிலேயே வளமிக்க பணக்கார நாடுகளுக்கு அதிகமாக அனுப்ப கனவு காண்கிறது. ஆனால், இந்நாடுகள் இந்தியா போன்ற வளரும் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய விரும்பும் பொருட்கள், தொழில் நுட்ப இயந்திரங்களோ, தொழில் நுட்ப யுக்திகளோ கிடையாது; மாறாக, அவை இந்தியாவிடமிருந்து இறக்குமதி செய்ய விரும்புவதெல்லாம் தோல், பருத்தி, மீன் மற்றும் உணவுப்பொருட்கள், பதப்படுத்தப்பட்ட இரும்பு என்பன போன்ற கச்சாப் பொருட்களான புராதன இறக்குமதிகளே. உலகச்சந்தையிலே பெரும் விலைச் சரிவினைச் சந்திக்கும் இப்பொருட்களை ஏற்றுமதி செய்வதால் இந்தியாவின் ஏற்றுமதி வருமானம் பெரிதும் வளர வாய்ப்பில்லை. கடந்த 10 ஆண்டுகளாக பல்வேறு விதங்களில் வளைந்து கொடுத்தும்கூட ஏற்றுமதி வருமானத்திலுள்ள மந்த நிலையினை, எந்த அரசாலும் மாற்ற முடியவில்லையென்பதே உண்மை.

ஏற்றுமதி இறக்குமதி கொள்கை, பொருளாதாரக் கொள்கை - இவற்றினை மாற்றுதல் வழியாக வெளிநாடுகளும், தொழில் நிறுவனங்களும், இந்தியாவிற்கு கோடானுகோடி மதிப்புள்ள மூலதனங்களை அள்ளிக்கொடுக்கும் என்ற பகற்கனவும் உள்ளது, ஆனால், சமீபத்திய

ஆண்டுகளின் அனுபவமும் இத்தகைய எதிர்ப்பார்ப்புகளை பகற்கனவாகவே நிலைநிறுத்திவிட்டது. வருகின்ற மூலதனங்கள் அனைத்தும் மக்களின் வாழ்வினையும், சுற்றுப்புறச்சூழலையும் பாதிக்கும் வகையிலே ஒரு விலையோடுதான் வருகின்றன. மேலை நாடுகளிலே அபாயகரமானவை, தேவையற்றவை என ஒதுக்கப்பட்ட தொழில்நுட்பங்கள், நமது நாட்டின் மனித, இயற்கை வளங்களை பெருமளவில் சிதைத்து, பன்னாட்டு நிறுவனங்களுக்கு மிகுதியாக லாபத்தைப் பெற்றுத் தருகின்றன. இத்தகைய தொழில்கள், அரசுடைய, மக்களுடைய எந்தவொரு கட்டுப்பாட்டுக்குள்ளும் அடைபடாமல், பகற்கொள்ளைக்காரர்களாக, குறுநில மன்னர்களாக வாழ அவர்களுக்கு உதவுகின்றன, இத்தகைய தொழில் நுட்பங்களையே, மேலை நாடுகள் நமக்கு அள்ளித்தர ஆவலாக இருக்கின்றன.

கணனிய மென்பொருள் ஏற்றுமதி வழியாக, கோடிக்கணக்கான ரூபாய்கள் அன்னியச் செலாவணியாகக் கிடைப்பது போன்ற மாயையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அத்துறையின் உள்ளிருந்து பார்க்கும் அறிஞர்களின் ஆய்வுப்படி, இவற்றில் மிகப்பெரும் வருமானம், வெளிநாடுகளிலேயே தங்கி வருகின்றது என்பதே உண்மை.

உற்பத்தியை அதிகரித்தல், □நிர்வாகத்தைச் சீர் செய்தல், போன்ற காரணங்களைச் சொல்லி, பல ஆண்டுகளாகக் கட்டி வளர்த்த **பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கும் முயற்சி** மும்முரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்க்கையினைப் பாதிப்பதொன்றாகும். தொழிலாளர்களே நிறுவனங்களை நடத்த முன்வரும் போதுகூட அம்முயற்சி நிராகரிக்கப்பட்டு 'தங்கக் கைகுலுக்கல்', 'தொழிற்சாலைகளை மூடுதல்', 'ஆட் குறைப்பு' போன்ற யுக்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

மின்சக்தித் துறையிலே தனியார்மயம் வெகுவேகமாக அரங்கேறி வருகிறது. பல்வேறு தனியார் கம்பெனிகளுக்கு மின்சக்தி உற்பத்தி செய்யும் உரிமை அளிக்கப்படுவதுடன், பொதுத்துறை நிதி நிறுவனங்களிலிருந்து, இவற்றிற்கு நிதிச் சலுகைகளும், முன்னுரிமைகளும் வழங்கப்படுகின்றன. இத்துறையிலே பன்னாட்டு நிறுவனங்களின் ஊடுறுவல் அதிகமாகி வருகிறது.

மராட்டிய மாநிலத்திலே, பாரதிய ஜனதா கட்சி, சிவசேனை, காங்கிரஸ் போன்ற அனைத்துக் கட்சிகளும் தங்களுடைய ஆட்சிக்காலத்திலே ENRON என்ற அமெரிக்க கம்பெனியுடன், திரை மறைவில் ஏற்றுக் கொண்ட ஒப்பந்தங்களினால் மாநில மக்களும், அரசும் படும்பாடு, தமிழகத்திற்கும் ஏனைய மாநிலங்களுக்கும் ஓர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

**பொதுவாக, இப்புதிய பொருளாதாரக் கொள்கைமாற்றங்கள், இந்திய மக்களிடையே ஈடு செய்ய முடியாத அளவுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன.** உயிர்காக்கும் மருந்துகளின் விலைகளிலே பேரேற்றம், லாபகரமான பொதுத்துறை நிறுவனங்களை பன்னாட்டு நிறுவனங்களுக்கு சுண்டைக்காய் விலைக்கு தானமளித்தல், துறைமுகங்கள், எரிசக்தி நிறுவனங்கள், போக்குவரத்து போன்ற பல்வேறு முக்கிய துறைகளை தனியார்மயமாக்குதல், தொழிற்சாலைகளிலிருந்து பெருமளவுக்கு தொழிலாளிகளை வீட்டுக்கனுப்புதல், ஏழை மக்களின் உணவு உத்திரவாதத்தின் அடித்தளமான பொது விநியோக அமைப்பினை அழித்தல், கல்வி,

உடல்நலம் போன்ற சமூகத் துறைகளுக்காக ஒதுக்கப்படும் தொகைகளை பெரிதாகக் குறைத்தல்........ இவையே நாள்தோறும் நடக்கும் நிகழ்வுகளாக மாறியுள்ளன.

அடிப்படை உரிமைகள், வேலைவாய்ப்பு, அடிப்படை வசதிகள், கல்வி, உடல்நலம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு இவை அனைத்தும் 'நாட்டின் வளர்ச்சிக்காக', நலிந்த மக்கள் விட்டுக்கொடுக்க வேண்டிய □தியாகங்களாகி□ நிற்கின்றன.

பன்னாட்டு நிறுவன ஆதிக்கங்களின் பிடியிலே சிக்குண்ட கடந்த 10 ஆண்டுகளிலே மக்களுடைய உண்மையான சமூக மேம்பாட்டு நிலை, உரிமைகள் பற்றிய, ஆழ்ந்த அனுபவங்கள் அடிப்படையிலான ஆய்வுகளாக வரத்தொடங்கிவிட்டன. இவ்வாய்வுகள் அரசின் மற்றும் அரசியல் கட்சிகளின் வெற்றுப் பிரச்சாரங்களை, நிர்வாணப்படுத்தும் வகையிலே அமைந்துள்ளன.

அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் தனியார் ஆய்வு மையங்களின் புள்ளி விபரங்கள், **மக்களிடையே பத்தாண்டுகளில் பெருமளவில் வறுமை அதிகரித்திருப்பதற்கான அறிகுறிகளையே காட்டுகின்றன.** உணவுப் பற்றாக்குறையால் வாடும் இந்தியர்களின் எண்ணிக்கை 1995-97ம் ஆண்டுகளில் சுமார் 20 கோடி என்று உலக உணவு மற்றும் வேளாண்மைக் கழகம் சுட்டிக் காட்டுகிறது. கடந்த பத்தாண்டுகளிலே அடிப்படை உயிர்த் தேவைகளின் அடிப்படையில் கிராமப்புறங்களிலே 75 சதவீதமும், நகர்ப்புறங்களிலே 54.4 சதவீத மக்களும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பன போன்ற அதிர்ச்சிதரும் ஆய்வுகள் சமீபத்திலே வெளிவந்துள்ளன.

முக்கியமாக **கிராமப்புறங்களிலே வறுமைநிலை** இரட்டிப்பாக அதிகரித்துள்ள அவல நிலை. தற்கொலை நிலைக்குத் தள்ளப்படும் விவசாயிகள், தம் குழந்தைகளை விற்க முயலும் ஆதிவாசிகள், இழப்பதற்கு ஒன்றுமில்லையென்ற நிலையிலும் வன்முறைச் சித்திரவதைகளில் மாட்டித்தவிக்கும் தலித்துகள், தொழிலாளர்கள் - இத்தகு உண்மைகள், மேற்கூறிய புள்ளி விபரங்களுக்கு அர்த்தம் கொடுக்கின்றன.

## உலகமயமாதலும் தமிழகமும்

1990-91ம் ஆண்டிலே இந்திய அரசு தீவிரமாக புதிய பொருளாதாரக் கொள்கையினைப் புகுத்திய போது, அதனை முழுமூச்சுடன் உற்சாகமாக ஏற்று **முன்னெடுத்துச் சென்ற மாநிலங்களிலே தமிழகம் முன்னிலை வகித்தது.** இன்றுகூட இந்திய மாநிலங்களிலேயே அந்நிய முதலீடுகளைப் பெறுவதிலே முதலிடத்தை வகிப்பது தமிழ்நாடு என்பதே தமிழக அரசு இரவு பகலாக பறைசாற்றும் செய்தி.

உண்மைதான்! தற்போது ஆட்சி செய்யும் தி.மு.கவும், முன்பு ஆட்சி செய்த அ.தி.மு.கவும் எவ்வளவுக்கு வளைந்து கொடுக்க முடியுமோ அவ்வளவுக்கு வளைந்து கொடுத்து, பன்னாட்டு தொழில் வணிக நிறுவனங்கள், தமிழக வளர்ச்சித் துறைகள் அனைத்திலும் வேரூன்ற வழியமைத்துக் கொடுத்துள்ளன.

சுற்றுப்புறச்சூழல் பாதிப்பைப்பற்றியோ, பகுதி மக்களின் உரிமைகள் பற்றியோ கவலைப்படாது, உரிய உள்ளாட்சி அமைப்புகளின் அனுமதிக்குக்கூட காத்திராமல், பெரும் தனியார் தொழில் நிறுவனங்களுக்கு பெரிய அளவில் நிலங்களை வாரி வழங்கும் வகையிலே புதிய சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

விவசாய நிலங்கள், கிராமப்பொது நிலவளங்கள், நீர்த்தேக்கங்கள், போன்றவை பெருமளவில் பகுதி மக்களிடமிருந்து அந்நியப்படுத்தப்பட்டு கைமாறியுள்ளன. தொழிற்பூங்காக்கள், பெரும் பண்ணைகள், வணிக மையங்கள் போன்றவைக்காக ஏழை விவசாயிகளிடமிருந்து தென்மாவட்டங்களிலே, அடிமாட்டு விலைக்கு வாங்கி அந்நியமாக்கப்பட்ட 5000க்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள்; வீட்டுக்கொருவருக்கு வேலை தருவோம் என்ற உத்திரவாதத்தின் பெயரில் தனியார் கார் கம்பெனிகளுக்காக அரசாங்கத்தால் ஸ்ரீபெரும்புதூரில் கைப்பற்றப்பட்ட 6000 ஏக்கருக்கும் மேலான நிலப்பரப்பு...... இப்படி எத்தனை எத்தனையோ

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஒரு பைசா செலவின்றி பன்னாட்டு நிறுவனங்கள் வசம்! **நீண்ட கால வரி விலக்குகள்! தொழிலாளர் உரிமைகளைப் பறிக்கும் ஒப்பந்தங்கள்.........** பக்கத்திலே தங்கள் பைகளை நிரப்பும், **திரைமறை ஊழல் ஒப்பந்தங்கள்!**

புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையிலே, பன்னாட்டு, இன்னாட்டு பெரிய தொழில் நிறுவனங்களோடு பல்வேறு முயற்சிகள் தமிழகத்திலே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை நலிந்த மக்களின் வாழ்க்கை நிலையினையும் சுற்றுப்புற சூழலையும் பெரிதும் பாதிக்கின்றன.

இப்பெரிய நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் அளவில்லா சலுகைகளினால் மக்கள் தோள்களின் மீது சுமத்தப்படும் வரிப்பளுவும் அதிகமாகின்றது.

*இத்தகைய மக்கள்-எதிர் முயற்சிகளில் முக்கியமானவை :*

- சுற்றுச்சூழலுக்குப் பாதகமான தொழில்நுட்பம் கொண்ட, ஒன்பது ஆண்டுகள் மக்கள் போராட்டங்களுக்குப் பிறகு, கோவா மாநிலத்தில் இருந்து விரட்டி அடிக்கப்பட்ட **Thapar Dupont** என்ற அமெரிக்க கம்பெனி, சென்னைக்கருகில்;
- சென்னை மாநகரிலே ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வந்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஏழை மக்களை, அனாதைகளாக, எவ்வித உத்தரவாதமுமின்றி தூக்கி எறியும் **சென்னைப் பெருநகருக்கு அழகு சேர்க்கும், பங்கிங்காம் கால்வாய் நீர் நிலை சுத்தம் செய்யும் பெருந்திட்டம்;**
- மக்களுக்கு வேலைவாய்ப்புப் பெருகும் என்று மாயை காட்டி, ஆயிரக்கணக்கான ஏக்கர் விளை நிலங்களையும், நீர் வளங்களையும் மற்றும் பல சலுகைகளையும் கொடுத்து உருவாக்கப்பட்டுள்ள **ஃபோர்டு, ஹுயுன்டாய், போன்ற கார் கம்பெனிகள்......**
- ஏற்கனவே சுற்றுச்சூழல் ஆபத்தின் எல்லையை எட்டியுள்ள **கடலூர்ப் பகுதியிலே,** 30,000 ஏக்கர்களுக்கு மேல் அபகரிக்கப்பட்டு, தோல் பதனிடுதல், எண்ணெய் சுத்திகரித்தல் போன்ற தொழில்களைத் தன்னடக்கிய **SIPCOT II திட்டம்.**
- அணுமின் சக்தி அபாயகரமானது, செலவதிகமானது என்ற காரணங்களால். மேலை நாடுகள் அணுமின் சக்தியை உதறித்தள்ளும் தருணத்திலே, ருஸ்ய நாட்டின் உதவியோடு **கூடங்குளத்திலே நிறுவப்படவிருக்கும் அணுமின் நிலையங்கள்.**
- தமிழகத்திலே தொழிலாளர்களுக்கு முன்னுரிமை கொடுக்காது, **சேலம் உருக்கு ஆலையை மூடும் முயற்சி.**
- **நெய்வேலி பழுப்பு நிலக்கரி** நிறுவனத்திற்கு சொந்தமான சுரங்கங்களையும், மின் சக்தி ஆலைகளையும் வெளிநாட்டு தொழில் நிறுவனங்களுக்கு மாற்ற முயலுதல்....
- வெளிநாட்டு முதலீட்டு திட்ட நிறைவேற்றத்திற்காக, நெல்லை மாவட்டம் **நாங்குநேரியில்** 2000 ஏக்கர் பரப்பில் தமிழக அரசு அறிவித்துள்ள ரூ.700 கோடி **தொழிற்பூங்கா.**

இன்னும் 60 சதவீதத்திற்கு மேலாக தமிழக மக்கள் சார்ந்துள்ள **விவசாயமும், கிராமப்புறத் தொழில்களும் பின்தள்ளப்பட்டுள்ளன.** ஒருபுறம் வணிகமயமாக்கப்படும் விவசாயம், மறுபுறம் விவசாயத்திற்காக அரசு ஒதுக்கும் நிதி ஒதுக்கீட்டுக் குறைப்பு இவற்றினால் தமிழக விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள், வணிக நோக்கங்களுக்காக கைமாறி அழிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, கிராமப்புறங்களிலே பலபேர் நிலங்களை இழந்து விவசாயக்கூலிகளாக மாறுகின்றனர். மேலும், கிராமங்களிலே வேலைவாய்ப்புக்கள் குறைந்த காரணத்தால், நகர்ப்புறம் நோக்கி நகர்ந்து சேரிகளிலே அல்லலுறும் போக்கு சென்ற பத்தாண்டுகளிலே பெரிதும் வளர்ந்திருக்கிறது.

பன்னாட்டு தொழில் நிறுவனங்களின் வருகையினால் **தமிழக சிறு தொழில்களும், குடிசைத்தொழில்களும் நசிந்து வருகின்றன.** கோவை, ஈரோடு பகுதிகளில் கொடிகட்டிப் பறந்த **ஜவுளித் தொழில்**, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பரவலாக வளர்ந்திருந்த **தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழில்,** நெல்லை மாவட்டத்தில் **பீடித்தொழில்** இன்னும் பல.... தொழிற்பேட்டைகள் தொடர்ந்து மூடப்பட்டு வரும் சூழ்நிலையிலே பெருமளவில் தொழிலாளர்கள் தூக்கியெறியப்பட்டு வீதிக்கு தள்ளப்படுகிறார்கள். பெருமளவிற்கு நிரந்தர தொழிலாளர்கள்கூட எந்தவித உத்திரவாதமும் இன்றி ஒப்பந்த ஊழியர்களாக மாற்றப்படும் துயரநிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகு போக்குகளினால் தமிழக மக்களின் சமூக முன்னேற்றமும், தமிழக சுற்றுப்புறச்சூழலும் பின்தள்ளப்பட்டு, பாதிக்கப்பட்டுள்ளன என்பது கடந்த பத்தாண்டுகளிலே மக்கள் கண்டறிந்துள்ள கசப்பான உண்மை. ஆனால் அடித்தள மக்கள் எழுப்பும் அவலக்குரல்களும், எதிர்ப்பு முழக்கங்களும் உண்மை நிலையினை எடுத்துரைக்கத்தான் செய்கின்றன.

இன்றும் தமிழகத்திலே **202.10 இலட்சம் பேருக்கும் அதிகமான மக்கள் வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்கிறார்கள்** என்ற கசப்பான உண்மை தொடர்கிறது.

தாராளமயமாக்கல், பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களின் பெரும் வருகை, பொதுத் துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படுதல், இவற்றால் **வேலை வாய்ப்புக்கள்** பெரிதளவில் குறைகின்றன. தலித்துகள், பெண்கள் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் மத்தியிலே வறுமையும், வேலைவாய்ப்பின்மையும் இன்னும் மோசமாகும் என்கின்ற உண்மையினை தமிழக திட்டப்பணிக் குழுக்களின் புள்ளி விபரங்களே அறிவிக்கின்றன.

வளர்ந்து வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஒருபுறம்; சுருங்கிக் கொண்டே வரும் வேலைவாய்ப்புக்கள் மறுபுறம்....... இச்சிக்கலில் மாட்டி தத்தளிக்கப் போகின்ற இந்தியாவின் ஆறு மாநிலங்களிலே தமிழகம் முக்கிய இடம் பெறுகின்றது என்கின்ற உண்மையினையும் தேசிய திட்டக்குழு அறிவித்திருக்கிறது.

இந்தியா சுதந்திரம் பெற்று 53 ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும் உலகிலேயே அதிக எழுத்தறிவற்றவர்களும், குழந்தைத் தொழிலாளர்களும் இருப்பது நம்நாட்டில்தான். கல்வித்துறையில் மத்திய, மாநில அரசுகளின் கவனம் குறைந்து வருவதும், அடிப்படைக் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதி குறைந்து வருவதும் நாம் அறிந்ததே.

ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிறுவன (யுனிசெப்) ஆய்வு தரும் புள்ளி விபரப்படி, **தொடக்கக்கல்விக்கான தமிழக அரசின் நிதி** ஒதுக்கீடு மொத்த நிதித் தொகுப்பிலிருந்து குறைந்து கொண்டே வருவது புலனாகிறது. 1990ல் 11.5% என்றிருந்த நிதி ஒதுக்கீடு 1998ல் 5.5% என்பதாகக் குறைந்துள்ளது.

சென்ற பத்தாண்டுகளாக உலகமயமாதல் மற்றும் தாரளமயமாக்கல் போக்குகளுக்கு வளைந்துகொடுக்கும் மத்திய, மாநில அரசுகள், **கல்வித்துறை தனியார்மயமாவதை** ஊக்குவிக்கின்றன. தொடக்கக்கல்வி முதல் தொழிற்கல்வி வரை அனைத்தும் தனியார்மயமாக்கப்பட்டு வணிகமயமாக்கப்படுவதால் இளம் வயதிலேயே **ஆங்கில மோகம்** பரவி வருவது வேதனைக்குரியது.

இத்தகு பின்னணியிலே "Sarva Shiksha Abhigyan" என்ற பிற்போக்கு வாத **இந்துத்துவ கல்விமுறையினை** மத்திய பாரதிய ஜனதா கட்சி அரசு அனைத்து மாநிலங்களிலும் திணிக்க முயல்கின்றது. அதோடு உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழக அரசு நடத்தி வரும் மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டமும் (DPEP) இப்போக்கிலேயே கல்விமுறையில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தி வருவது அச்சத்திற்குரியது.

கடந்த 5 ஆண்டுகளில் **தமிழகம் ஒரு போலீஸ் மாநிலமாக** உருவெடுத்து வருகிறது. மனிதநேய கொள்கை, உரிமை பாதுகாப்பு போன்றவைகளை முன் வைத்து நடத்தப்படும் அமைதியான எதிர்ப்பு முயற்சிகள் கூட, கொடிய வன்முறையால் தாக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

காவல் நிலையங்களில் சித்திரவதைகளும், சாவுகளும் தொடர்கின்றன. எவ்வித நிபந்தனையின்றி அடக்குமுறைகளும், அச்சுறுத்தித் துன்புறுத்தும் செயல்களும் தொடர்வதால், ஒரு காட்டுமிராண்டி கலாச்சாரமே மக்களை அலைக்கழிக்க ஆரம்பித்திருக்கிறது.

# மத, இன, சாதிய பாலிய வெறி அடக்குமுறைக் கலாச்சாரம்

**இந்தியா:**

மக்களின் அடிப்படை தேவைகள், உரிமைகள் பூர்த்தி செய்யப்படாது நிலவும் வெற்றிடத்திலே மத, இன, சாதிய, பாலிய வெறிகளின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ள பாசிச அடக்குமுறை ஆதிக்கங்கள் உலகளவும் பரவிவருகின்றன. **இந்திய அரசின் ஒவ்வொரு துறையினையும்** - நாடாளுமன்றம், நீதிமன்றங்கள், மக்கள் தொடர்பு சாதனங்கள், கல்வி நிலையங்கள், நிர்வாகம், ஆயுதப்படைகள், காவல்துறை அனைத்தையும் ஊடுருவி, **சாதாரண மக்களின் மனங்களிலும்** இத்தகு நச்சு விதைகள் ஆழமாகத் தூவப்பட்டுள்ளன.

**1970களிலே அண்டைநாடுகளுடன் போர், 'அவசரச் சட்ட நிலை'** போன்ற யுக்திகளால் காங்கிரஸ் ஆட்சி மத, இன, சாதிய அடிப்படையில், அடக்குமுறைகளுக்கும், ஒரு யுத்தப் பொருளாதார அமைப்புக்கும், அதிகார அராஜகங்களுக்கும் தெளிவாக வித்திட்டது.

**1984லே சீக்கியர் படுகொலை.... 1992லே பாபர் மசூதி இடிக்கப்பட்டது........** பல்வேறு கட்சியின் பலவீனங்களின் அடிப்படையிலே ஆட்சிக்கு வந்துள்ள பாரதிய ஜனதா கட்சி, ஆட்சியைக் கைப்பற்றி ஆண்டு வருவது........ RSSன் கருத்துக்களும் அங்கத்தினர்களும் எல்லாத்துறைகளிலும் முரட்டுத்தனமாக ஊடுருவும் போக்கு...... **மதக்கலவரங்களைத்** திட்டமிட்டு ஏற்படுத்துவதன் மூலமாகவும், சிறுபான்மையினரது அடிப்படை உரிமைகளையும், வாழ்க்கை நிலைகளையும் தகர்ப்பதிலும், பல்வேறு மத இனத்தவரிடையே **எதிரி மனப்பான்மை** படிப்படியாக வளர்க்கப்பட்டு வருகிறது.

இவை அனைத்துமே பாரம்பரியமிக்க, மனித நேய மதிப்பீடுகள் பலவற்றின் ஊற்றாக இருந்த இந்திய வாழ்க்கை முறையினையும் பன்மைத்தன்மையனைத்தையும் இந்துத்துவா எனும் மத, இன, சாதிய, பாலிய வெறியான குறுகிய வட்டத்துக்குள்ளே சுருக்கி அடித்தள மக்களின், பெண்களின், தலித்துகளின், ஆதிவாசிகளின் வாழ்க்கையினை அடக்க, அதிகாரம் செலுத்தும் முயற்சிகளே...

இந்துத்துவம் வளர்ந்துவரும் சூழ்நிலையிலே, இந்தியாவிலுள்ள அனைத்து மதங்களிலுமே (கிறிஸ்தவம், இஸ்லாம், சீக்கியம்.....) **மதப் பிற்போக்கு வாதங்களும், மதவெறியினைத்தூண்டும் முயற்சிகளும்,** அவற்றிற்கான அமைப்புகளும் கூட பெருகி வருவது வேதனைக்குரியது.

ஆதிக்க சக்திகளின் வழக்கமான ஆயுதம், **அண்டை நாடுகளுடன் யுத்த நிலையினை நிலைநிறுத்துவதும்,** மக்களிடையே அவ்வப்போது **யுத்த பயத்தினையும், எதிரி வெறியினையும்** தீயெனப் பரவச் செய்து சுகம் காணுவதும் ஆகும். பன்னாட்டு ஆதிக்க நிறுவனங்களும் இதற்கு சாதகமாக இயங்கி வருகின்றன. உலகின் பொருளாதாரத்தை மிகப்பெரிய அளவில், போர் ஆயுதப் பொருளாதாரமாக மாற்றி, வளரும் நாடுகளிடையே பகையையும், யுத்தங்களையும் ஏற்படுத்தி, இருதரப்பினருக்கும் ஆயுத விற்பனை செய்து மேலைநாடுகள் பல கொழுத்து வருகின்றன.

பாகிஸ்தானை ஒரு புகைப் பின்னலாக வைத்துக்கொண்டு, இன்று இந்தியாவிலுள்ள மத, இன, சாதிய, பாலிய ஆதிக்கச் சக்திகள், இந்தியப் பொருளாதாரத்தைப் போர் ஆயுதத் தேவையின் அடிப்படையான பொருளாதாரமாக மாற்ற, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டில் நடத்தப்பட்ட **"கார்கில் யுத்தம்"** பெருமளவிலே இந்திய மக்கள் மீது திணிக்கப்பட்ட மாயை விளையாட்டே; ஏறக்குறைய ரூ.20,000 கோடி ரூபாய்களையும், எண்ணற்கரிய மனித உயிர்களையும் இழந்த முயற்சி, இன்று தொடர் நிலையாக மாற்றப்பட்டு நலிந்த மக்களின் தோள்களிலே மேலுமொரு பாரமாகச் சுமத்தப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டிலே பாதுகாப்புத்துறைக்காகக் காண்பிக்கப்பட்ட செலவுகள் மட்டும் ரூ.47,000 கோடி ரூபாய்க்கு மேல்!.

## தமிழகம்

1967ம் ஆண்டு தமிழகத்திலே ஆட்சிக்கு வந்த **திராவிட இயக்கங்களும், கட்சிகளும்** முழுவதும் திசைமாறி, தங்களது பாரம்பரிய மதிப்பீடுகளான மதச்சார்பின்மை, அறிவியல் போக்கு, பொது வாழ்விலே கண்ணியம் போன்றவற்றிற்கு, முதற்பெரும் எதிரிகளாக நிற்கின்றன. **நிறுவன மயமாக்கப்பட்ட ஊழல்,** மத, இன, சாதிய வெறிகளைத் தூண்டி விட்டு, பிரித்தாளும் ஆட்சி முறைகள், தலித்துகள், பெண்கள், பழங்குடியினரின், அடிப்படை உரிமைகளை ஏளனப்படுத்த மேற்கொள்ளும் **அடக்குமுறைகள்,** தமிழகத்தையே ஒரு போலீஸ் அரசாக மாற்றியுள்ள போக்கு, இவை அனைத்திலுமே தி.மு.கவோ, அ.தி.மு.கவோ மற்ற எந்த திராவிடக் கட்சிகளுமோ ஒரே நிலைப்பாட்டில் நிற்பவையே.

முற்போக்குக்கருத்துக்களும், மத, இன, நல்லிணக்கமும் ஓரளவுக்கு வளர்ந்து வந்த தமிழகத்திலே, இன்று மத, இன, சாதிய, பாலிய வெறிகள் தலைவிரித்தாடுகின்றன. 'இந்துத்துவா', பார்ப்பனிய, சாதிய ஆதிக்கக் கருத்துக்களைக்கூட, வெளிப்படையாக பறை சாற்றப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மற்ற மதங்களிலும், பிற்போக்கு சக்திகளும், மனிதநேய எதிர்க்கலாச்சாரங்களும் பெரிதும் உருவெடுத்துள்ளன.

## பாதிக்கப்படும் மக்கள்

**ப**ன்னாட்டு நிறுவன ஆதிக்கங்களாளும், மத, இன, சாதிய, பாலிய வெறி அடக்குமுறைக் கலாச்சாரத்தினாலும் ஒரு சிலர் பலனடைய, பெரும்பான்மையான மக்களின் சமூக மேம்பாடும் அடிப்படை உரிமைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இப்போக்குகள் நீடித்தால் எதிர்காலம், கடந்த பத்தாண்டு அனுபவங்களைவிட பன்மடங்கு மோசமாக வாய்ப்புக்கள் உள்ளன.

### அ. பெண்கள்

தமிழகம் பல்வேறு துறைகளிலே முன்னேறி இருப்பினும் அரசியல், பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், மற்றும் அனைத்துத் தளங்களிலும் பெண்களின் சமூக மேம்பாட்டு நிலையும், அடிப்படை உரிமைகளும் மிகவும் மோசமான நிலையிலேயே தொடர்கிறது. குறிப்பாக **ஆண்களோடு ஒப்பிட்டு பார்க்கும்போது**, தமிழகப் பெண்களின் நிலை பொதுவாகவே பின்னோக்கித் தள்ளப்பட்டுள்ளது. முக்கியமாக **தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் கிராமப்புற பெண்களின் நிலை,** கல்வி, உடல்நலம், அடிப்படைத் தேவைகள், வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு தளங்களிலும், நலிந்த நிலை நீடிக்கின்றது.

பெண்களுக்காக தமிழக அரசு அநேக நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்தாலும், அவை அனைத்துமே **ஆண்-பெண் சமத்துவ கண்ணோட்டமோ, பெண்ணிய கண்ணோட்டமோ இல்லாது,** பெண்களின் சார்பு தன்மையினை அதிகரிக்கும் வகையிலேயே அமைந்துள்ளன.

தமிழகத்தில் ஒவ்வொரு வருடமும் 1000-க்கும் மேலான **பெண் சிசுக்கொலைகள்** தொடர்கின்றன. தமிழகத்தில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேலான ஒன்றியங்களிலே முக்கியமாக சேலம், தர்மபுரி, மதுரை, போன்ற மாவட்டங்களில் இந்த மாதிரியான சிசுக் கொலைகள் பெருமளவில் நடைபெறுகின்றன.

புதிய பொருளாதாரக் கொள்கையினால் விவசாய நிலங்கள் வியாபாரமாக்கப்படுவதாலும், விளைநிலங்கள் பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்கப்படுவதாலும், புதிய தொழில்நுட்ப கருவிகளின் வருகையினாலும், பெண்கள் மிகப் பெரிய அளவில், **ஏற்கனவே குறைவாக உள்ள வேலைவாய்ப்புக்களை இழக்கின்றனர்.**

பன்னாட்டு நிறுவனங்களின் ஏற்றுமதி வணிக வளாகங்களில், எவ்வித உத்திரவாதமும் இன்றி, குறைந்த ஊதியத்திற்கு அமர்த்தப்படுவதோடு, இங்கு நிலவும் மோசமான பணிநிலை, பாலியல் வன்முறை மற்றும் பல்வேறு பணித்தொடர்பான உடல் நலக் குறைவு தரும் சூழலால், நலம் குன்றி வெளித்தள்ளப்படுகிறார்கள்.

மேலும் புதிய பொருளாதார கொள்கையின் அடிப்படையில் பெண்கள் நலத்திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்படுவதாலும், பொதுவாகவே சமூக நலத்துறைகள் பெரும் அளவில், தனியார்மயமாக்கப்படுவதாலும், உடல் மற்றும் உள்ள அளவில் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

சமீபகாலமாக, எழுந்து வரும், பெண்ணுரிமை இயக்கங்களின் தலைவிகளும், உரிமைக்குரல் கொடுக்கும் பெண்களும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்; ஏன், கொலையும் செய்யப்படுகிறார்கள். பெண்கள் சமூக அளவிலே மத, இன, சாதிய ரீதியாக அடக்குமுறைக்கும், வன்முறைக்கும் ஆளாவதோடு **குடும்ப அளவிலும்** பாலிய மற்றும் பல்வேறு கொடுமைகளுக்குள்ளாக வேண்டியுள்ளது.

பெண்கள் அதிகாரப்பகிர்வு ஆண்டாக கொண்டாடப்படும் இவ்வேளையிலும், **பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதா** எல்லாக்கட்சிகளாலும், அரசுகளாலும் புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. மேடையிலே 33 சதவீத இடஒதுக்கீட்டினை ஆதரித்துப் பேசும் கட்சிகள் கூட, தங்களின் கட்சிகளிலே பொறுப்புள்ள நிலைகளில், மிகக் குறைவாகவே பெண்களை நியமனம் செய்கின்றனர். வருகின்ற தேர்தலுக்கு அறிவிக்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல்களில், தி.மு.க., 9 சதவீதத்திற்கும் குறைவாகவும், அ.தி.மு.க., 15 சதவீதம் இடங்களை மட்டுமே பெண்களுக்கு அளித்துள்ளது.

## ஆ. தலித் மக்கள்

நாடு விடுதலை அடைந்து அரைநூற்றாண்டுக்கு மேலாகிய நிலையிலும், ஏறக்குறைய 35 ஆண்டுகள் திராவிடக் கட்சிகளின் ஆளுகைக்குப் பிறகும் தமிழகத்திலே தலித்துகளுக்கு இரட்டைக்குவளை முறை, தனி இடுகாடுகள், கிராமப் பொது வளங்களிலே பங்கு மறுப்பு, ஆலய நுழைவு மறுப்பு போன்ற **தீண்டாமைக் கொடுமைகளும் அவலக்கேடுகளும்** தொடர்ந்து நிலவுவது வெட்கத்துக்குரியது, கண்டிக்கப்பட வேண்டியது.

**'நாடு'** என்கின்ற சாதியப் பாரம்பரிய காட்டாட்சி முறை நிலவும் தஞ்சை, புதுவை, முகவை மற்றும் நெல்லை மாவட்டங்களில், இவ்வுரிமைகள் பெரிதும் மறுக்கப்படுகின்றன; மேலும் மேற்கு, மற்றும் வடக்கு மாவட்டங்களிலே, **அருந்ததிய மக்கள் நிலை** இன்னும் கொத்தடிமை முறைகளிலே சிக்குண்டவாறே உள்ளது.

தலித்துகளுக்கு சேர வேண்டிய **நிலங்கள், பொது வளங்கள்** அனைத்தும் தொடர்ந்து மறுக்கப்படுகின்றன. கிராமப் பொதுச் சொத்துக்களான ஏரி, குளம், மீன் குத்தகை, மர மகசூல், மணல் மற்றும் கல் குவாரிகளில் தலித் மக்களுக்கு உரிய பங்குகள் மறுக்கப்படுகின்றன. முக்கியமாக இலட்சக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள பஞ்சமி நிலங்கள் மீண்டும் தலித்துகளை வந்தடைய, எந்த அரசியல் கட்சியுமோ, அரசோ முயற்சி எடுப்பதில்லை.

இச்சூழலிலே புதிய பொருளாதார, தொழில் மற்றும் வர்த்தக வளர்ச்சி விரிவாக்கத் திட்டங்கள் என்கிற பெயரில், அவர்களின் வாழ்வியல் ஆதாரங்கள் மேலும் அபகரிக்கப்படுகின்றன; பயிர் நிலங்கள், வனவளங்கள் அனைத்தும் அவர்களிடமிருந்து பறித்தெடுக்கப்படுகின்றன. இவர்களுக்கான வேலைவாய்ப்புகளும் பெரிதளவில் குறைந்து வருகின்றன.

சாதிய வெறியுடன் அடித்தட்டு மக்களின் உரிமைக்குரலை அடக்கி, அவர்கள் மீது கட்டவிழ்க்கப்படும் மத்திய, மாநில அரசுகளின், மற்றும் காவல்துறையின் ஒடுக்குமுறைகள் ஒருபுறம்; பிற சாதிக்கும்பல்களின் வெறித்தன தாக்குதல்கள் மறுபுறம்.

இவற்றால் அவர்களுடைய உடல் உழைப்பு, உயிர்வாழ் இடங்கள், சொத்துக்கள் அனைத்தும் தொடர்ந்து சூரையாடப்படுகின்றன.

## இ. பழங்குடியினர்

தமிழகத்திலே பழங்குடியினரின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும், இவர்களுடைய சமூக, பொருளாதார, கல்வி நிலைகள் மற்ற அனைத்துத் தரப்பினரையும்விட மிக மோசமான நிலையில் இருக்கின்றன.

பழங்குடியினருக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள், மற்றவர் கைகளுக்கு மாறி வருகின்றன. அரசும், தனியார்துறைகளும், தம் புதிய வளர்ச்சித் திட்டங்களுக்காக இம்மக்களின் பயிர் நிலங்களையும், வன வளங்களையும், அவர்களின் அனுமதி இல்லாமலே பறித்தெடுத்துக்கொண்டு, அவர்களை அனாதைகளாக்கி இடம் பெயர்ந்து செல்ல கட்டாயப்படுத்துகின்றன.

**மத்திய பாரதிய ஜனதா கட்சி அரசு, பழங்குடியினரின் நலன்களைப் பாதுகாக்கும் அரசியல் சட்டத்தின் 5வது அட்டவணைப் பகுதியை நீக்குவதிலே மும்முரமாக இருக்கிறது.** மத, இன வெறி அடிப்படைவாத போக்கு கொண்டு ஆளும், பாரதிய ஜனதா கட்சி அரசுடன் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்துள்ள தி.மு.க அரசு, பழங்குடியின மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவதை பார்த்துக்கொண்டு வாளாவிருக்கிறது. மற்ற எந்த கட்சிகளும்கூட இவர்களது உரிமைகளுக்காக குரல் கொடுத்துப் போராடத் தயாராகயில்லை.

சமீபகாலமாக ஆதிவாசிகள் மீது காவல்துறையினர் மேற்கொண்டு வரும் அராஜக அடக்குமுறைகளும் வன்கொடுமைகளும் பெரிதும் அதிகரித்துள்ளன.

## ஈ. குழந்தைகள்

தமிழகத்தில் குழந்தைகளுக்கென பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்த போதிலும் **நலிந்த குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகளின்** - (முக்கியமாக குழந்தைத் தொழிலாளர்கள், குழந்தைக் கொத்தடிமைத் தொழிலாளர்கள், தெரு ஓரச் சிறார்கள், சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட, அனாதை மற்றும் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள், பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்ட குழந்தைகள், சட்டச் சிக்கல்களில் மாட்டித் தவிக்கும் குழந்தைகள், உடல் ஊனமுற்ற குழந்தைகள், எச்.ஐ.வி. நோய்க்கிருமிகளால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்) - ஒட்டுமொத்த சமூக நிலை தொடர்ந்து மோசமாகவே உள்ளது.

தற்சமயம் மாநில மொத்த உற்பத்தியில் 0.02 சதவீதம் மட்டுமே குழந்தை பாரமரிப்பு செலவினங்களுக்கு **நிதி ஒதுக்கீடு** செய்யப்படுகிறது. அரசு குழந்தை காப்பகங்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு குழந்தைக்கு மிகக் குறைவாக 23 பைசா நிதி ஒதுக்கப்படுகிறது.

தமிழகத்தின் பல்வேறு தொழிற்துறைகளிலும் - (விவசாயம், தீப்பெட்டி தொழிற்சாலைகள், செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழில், நெசவுத் தொழில், ஆயத்த ஆடைத் தொழிற்சாலைகள், உலோகத் தொழில், தோல் பதனிடும் தொழில், கொசுவலை பின்னுதல், பீடி சுருட்டுதல்.....) - **குழந்தைத்தொழிலாளர்முறை** பரவலாக நிலவுகிறது.

1976ம் ஆண்டு கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு சட்டத்தின்படி, விடுவிக்கப்பட்ட ஒரு சில **கொத்தடிமைக் குழந்தைத் தொழிலாளர்களும்** கூட சரியான மாற்றுவழி இல்லாத காரணத்தால் மீண்டும் அதே நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**2000ம் ஆண்டிலே கொண்டுவரப்பட்ட சிறார் நீதிச்சட்டம்** தொடர்ந்து குழந்தைகளைக் குற்றவாளியாகப் பார்க்கும் குறுகிய கண்ணோட்டத்துடனேயே செயல்பட்டு வருகிறது. அதனால் சிறார் கூர்நோக்கு இல்லங்கள்கூட, குழந்தைகளுக்கு சாதகமான சூழ்நிலையினை ஏற்படுத்திக் கொடுக்கத் தவறுகின்றன.

### உ. சிறு மீனவர்கள்

பன்னாட்டு மற்றும் பெரும் தொழில் நிறுவன ஆதிக்கங்களால், தமிழகத்தின் 1000 கிலோமீட்டர் நீள கடற்கரையெங்கும் இரசாயனத் தொழிற்சாலைகள், மருந்துக் கம்பெனிகள், இறால் பண்ணைகள், தனியார் மின் உற்பத்தி நிலையங்கள், அணுமின் நிலையங்கள், பன்னாட்டு கேளிக்கைக் கூடங்கள் இன்னும் எத்தனை எத்தனையோ?.........

குறிப்பாக மீனவ சமுதாயங்களையும், கடற்கரைச் சுற்றுப்புறச்சூழலையும் அலைக்கழிக்கும் -

- ❖ தொடர்ந்து விபத்துக்களால் உயிர்ச் சேதங்களை விளைவிக்கும் தூத்துக்குடி **ஸ்டெர்லைட் தொழிற்சாலை;**
- ❖ அபாயகரமான, மற்றும் பிற நாடுகளால் ஒதுக்கப்பட்டுள்ள தொழில்நுட்பத்துடனும் ருஸ்ய நாட்டின் உதவியோடும் **கூடங்குளத்தில் திட்டமிடப்படும் அணுமின் நிலையம்.**
- ❖ ஏற்கனவே சுற்றுச்சூழல் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் **கடலூர்ப்பகுதியிலே** 6000 கோடி ரூபாய் செலவிலே வரவிருக்கும் மின் நிலையம்........
- ❖ இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும் மதிக்காது, மீனவ சமூகங்களையும், கடற்கரை சூழல்களையும் தொடர்ந்து அழித்து வரும் **இறால் பண்ணைகள்;**
- ❖ பழவேற்காட்டிலே மக்களின் உடல்நலத்திற்கும், கடற்கரை வளங்களுக்கும் பெரும் பாதிப்பு விளைவிக்கும் **எண்ணூர் துணைத் துறைமுகமும், வட சென்னை மின் நிலையமும்...**

இவை போன்று புதிய பொருளாதாரக்கொள்கையொட்டிய திட்டங்களை, தமிழகக் கடற்கரைப்பகுதிகளில் மேற்கொள்ளும் முயற்சிகளினால், தமிழக கடற்கரை முழுவதிலும் இயற்கை வளங்களும், மீனவ சமூகத்தவர் வாழ்வியலும் நிர்மூலமாக்கப்பட்டு நிலைகுலைந்து நிற்கின்றன.

மேலும், தொழில் வளர்ச்சியினையும் ஏற்றுமதியினையும் அதிகரிக்கும் சாக்கிலே, பல்வேறு துறைமுகங்களிலே மின் நிலையங்கள், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் போன்ற பல்வேறு கட்டுமானப் பணிகளை, தனியார் தொழில் நிறுவனங்களுக்கு விட்டு, பெருமளவில் சலுகைகளும் வரி விலக்குகளும் அளிக்கப்படும் வகையிலே, தமிழக கடற்கரை வாரியம், தனது கொள்கைகளை பெரிதும் மாற்றியமைத்துள்ளது. இவையனைத்தும், ஆழ்கடல் மீன் பிடிக்கும் பெரிய முதலாளிகள் நலன்களை மையப்படுத்தும் வகையிலே அமைந்துள்ளன.

## ஊ. நகர்ப்புற குடிசைவாழ் மக்கள்

தமிழகத்திலே சென்னை மற்றும் அனைத்துப் பெருநகர்ப் பகுதிகளிலும் இலட்சக்கணக்கான குடும்பத்தினர் அடிப்படை வசதிகளோ, வாழ்விட உத்திரவாதமோ இன்றி, சேரிகளிலே வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் நகரங்களின் பல்வேறு கட்டுமானப் பணிகளிலும், துப்புரவு, போக்குவரத்து போன்ற சேவைப்பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

சிங்காரச் சென்னை□, பக்கிங்காம் கால்வாய் சீரமைப்புத் திட்டம், நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் போன்ற பல்வேறு வசதிபடைத்தோருக்கு உதவும் திட்டங்களுக்காக சேரிகளிலே வாழும் மக்கள் தூக்கியெறியப்படுகின்றனர்.

புதிய பொருளாதாரக் கொள்கைகளின் பின்னணியில் தொழில் வளர்ச்சி, அதற்கான கட்டுமானப் பணிகள், சாலை வசதிகள், துறைமுகம் மற்றும் சுற்றுலாத்துறை வளர்ச்சிப் பணிகள் என்று பல துறைகளின் வளர்ச்சிக்காக தமிழக அரசும், பல்வேறு துறைகளும் அதிரடித் திட்டங்களை மேற்கொண்டுள்ளன. ஏழைக் குடிசைவாழ் மக்கள் வசிக்கக்கூடிய குடிசைப் பகுதிகள், புறம்போக்கு நிலங்கள் பன்னாட்டு மற்றும் பெரும் தொழில், வணிக நிறுவனங்களுக்கு தாரை வார்த்துக் கொடுக்கப்படுகின்றன. இவற்றினால் நகர்புற குடிவைவாழ் மக்களின் நிலை, இன்று மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

மாற்றுத்திட்டங்கள், மாற்று இடங்கள் ஏதும் பரிந்துரைக்கப்படாது, சம்பந்தப்பட்ட மக்களை கலந்தாலோசிக்காது அரசும், அரசு எந்திரங்களும் அரக்கத்தனமாக முடிவெடுத்து செயல்படுகின்றன. அரசின் இப்போக்கினை எதிர்த்துப் போராடும் குடிசைவாழ் மக்கள் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். மாற்று இடங்களாக, அரசு அறிவிக்கும் இடங்களும் மக்கள் குடியிருக்கத் தகுதியில்லாத பகுதிகளாகவும், நகரை விட்டு தொலைதூரத்திலும் இருக்கின்றன. இவற்றால், மேலும் இம்மக்களின் வாழ்வியல் ஆதாரங்கள், வேலை வாய்ப்பு, போன்றவை கிடைக்காத சூழலுக்கும், நெருக்கடிக்கும் இவர்கள் தள்ளப்படுகிறார்கள்.

## எ. தொழிலாளர்கள்
### (முக்கியமாக கூலி விவசாயிகள் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்கள்)

பொதுவாகவே, பெரியளவில் தொழில்துறைகளும் கணனிமயமாக்கப்பட்ட சேவைத்துறைகளும் பெரிதும் வளர்ந்துள்ள தமிழகத்திலே, பெரும்பான்மையான மக்களின் வேலை உத்திரவாதத்திற்கு அடிப்படையான விவசாயமும், சிறு தொழில்களும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. இதனால் இந்தியாவிலேயே வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் அதிகமாக நிலவும் மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் நீடிக்கிறது. இந்தப்போக்கில், புதிய பொருளாதாரக் கொள்கைகளினாலும், ஏற்றுமதி சார்ந்த விவசாயமும், தொழில்களும் மட்டுமே முதன்மைப்படுத்தப்படுவதாலும் வேலைவாய்ப்புக்கள் அதிகமாகவே குறைக்கப்பட்டு வருகின்றன. பன்னாட்டு, இந்நாட்டு தொழில் நிறுவனங்களின் வற்புறுத்தலின்படி, தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் பெரிதும் மறுக்கப்படுவதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளது.

தமிழகத்திலே ஏறக்குறைய 90 சதவீத தொழிலாளர்கள், **விவசாயம் மற்றும் அமைப்பு - சாரா தொழிற்துறைகளைச் சார்ந்தவர்களாகவே** உள்ளனர். சட்ட உரிமைகள், தொழில் வரைமுறைகள் போன்ற பாதுகாப்புகளற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ள அமைப்பு சாரா தொழிலாளர்கள், தொழிலாளர் நலச் சட்டங்கள் வழியாகக் கிடைக்கக்கூடிய உரிமைகள், பலன்கள் எதுவும் பெற இயலாது, வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கின்றனர். இதுவே இவர்களுடைய குடும்பப் பொருளாதாரத்தைப் பாதிக்கின்றது. குடும்பப் பொருளாதாரப் பற்றாக்குறையை ஈடுகட்ட வேண்டி, குழந்தைகளும் தங்கள் உழைப்பை விற்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். மேலும், தொழிற்கல்வி முறையாக பெற இயலாத பல தொழிலாளர்கள் கொத்தடிமையாகும் நிலையும் உருவாகிறது. இச்சூழல், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்கு பலவற்றிற்கு வழிவகுக்கின்றது.

எடுத்துக்காட்டாக, எண்ணற்ற கல்லுடைக்கும் தொழிலாளர்கள் சேலம், நாமக்கல், திருச்சி, கரூர், புதுக்கோட்டை, மதுரை மற்றும் தமிழகத்தின் ஏனைய மாவட்டங்களிலும், பக்கத்து மாநிலங்களிலும் கூட கொத்தடிமைகளாக வேலை செய்கின்றனர். இவர்களை மீட்டெடுக்கவும், உரிய மறுவாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்தவும் தமிழக அரசின் அடுத்தடுத்த அரசுகள் தொடர்ந்து தவறி வருகின்றன. 7.5 இலட்சம் பீடித் தொழிலாளர்கள் உள்ள தமிழகத்திலே, 2 இலட்சம் தொழிலாளர்களுக்கு மட்டுமே குறைந்தபட்சத் தொழிலாளர் தகுதி வழங்கப்பட்டுள்ளது.

விவசாயம் மற்றும் அமைப்பு சாரா தொழிற்துறைகளில் **குறைந்தபட்ச ஊதியம்** நிர்ணயிக்கப்பட்டிருந்தபோதிலும், மொத்தமாக அரசு நிர்வாகங்களாலும், சட்டங்களைத் திரித்து பெரும் இலாபமடையும் முதலாளிகளாலும், இவ்வுரிமைகள் பொதுவாக வழங்கப்படுவதில்லை.

### ஏ. உடல் ஊனமுற்றோர்

தமிழக உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பு தரும் புள்ளி விபரங்களின்படி, தமிழகத்தில் சுமார் 16 இலட்சம் உடல் ஊனமுற்றவர்கள் உள்ளனர். இவர்களில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்டோர், கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டு பெரும்பகுதி கிராமப்புறங்களில், வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றனர். இலட்சம் பேருக்கும் மேல் பிச்சையெடுத்து தங்களையும், தங்களைச் சார்ந்தோரையும் காப்பாற்றி வருகின்றனர்.

இவர்களுக்காக, சிற்சில நிவலரணத் திட்டங்கள் தமிழக அரசினால் மேற்கொள்ளப்பட்ட போதிலும், இவர்களுக்கு மறுவாழ்வு ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலே திட்டங்கள் இல்லாத காரணத்தால், பெரும்பாலோர், பயன்பெற வழியறியாது தவிக்கின்றனர்.

தொடர்புக்கு
**இயக்குநர்,**
**சமூக கண்காணிப்பகம் - தமிழ்நாடு.**
**202,** சித்ரா அவென்யூ (ஷாப்பிங் இன்)
எண்**.9,** சூளைமேடு நெடுஞ்சாலை, சென்னை **- 600 094.**
தொலைபேசி **: 91-44-23746044,** தொலைநகல் **: 91-44-23746107**
மின் அஞ்சல் **: manu50@vsnl.com**